Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள்~08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | ஆடி -27 | 12-08-2003 | செவ்வாய்க்கிழமை | ஓசை 175

R/A: Nelsan Yasarathne
T.P: 024-23318
NELSON LEARNERS
(Government Approved "A" Grade Driving School)
Reg No :D.S.242
சிறிய வாகனம் முதல் பெரிய வாகனம் வரை பயிற்சிகொடுத்து லைசன்ஸ் கொடுக்கப்படும்.
கிளை: வவுனியா, யாழ்ப்பாணம். (ய-8246)
No:86, Bus Stand Complex Vavuniya.

# புலிகளின் ஐரோப்பியப் பயணம் குறித்து ஆராய

# சூல் ஹெய்ம் கிளிநொச்சி வருகிறார்

## குரங்குபாஞ்சான் விவகாரம் குறித்தும் பேசப்படும்



**(கிளிநொச்சி)**

**தமிழீழ விடுதலைப்புலிகளுடன் முக்கியமான சந்திப்பொன்றை மேற்கொள்ள நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சூல்ஹெய்மும் சிறிலங்காவிற்கான நோர்வே தூதுவரும் நாளை கிளிநொச்சிக்கு வருகின்றனர்.**

ஐரோப்பாவில்சட்ட நிபுணர்களுடன் இடைக்கால நிர்வாகத் திட்ட வரைவு குறித்தும் ஆராயவுள்ள விடுதலைப் புலிகள் குழுவினரின் ஐரோப்பிய பயணஏற்பாடு குறித்தும் இடைக்கால நிர்வாகத் திட்ட வரைவு குறித்தும் குரங்குபாஞ்சான் விவகாரம் குறித்தும் விவாதிக்கும் நோக்கோடு இவர்கள் கிளிநொச்சிக்கு வருவதாகத் தெரியவருகின்றது.

சிறிலங்கா அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைத்த இடைக்கால நிர்வாக சபைத் திட்டவரைவிற்கு மாற்றீடான புதிய வரைவொன்றைப் புலிகள் தயாரிக்கவுள்ளனர்.

இந்தப் புதிய வரைவு குறித்து வெளிநாடுகளிலுள்ள சட்ட நிபுணர் களுடன்புலிகள்ஐரோப்பிய நாடொன்றில் ஆலோசனை நடத்தவுள்ளனர்.

கொழும்பிற்கு நாளை வர விருக்கும் எரிக்சூல்ஹெயமும் சிறிலங்காவிற்கான நோர்வே தூதுவரும் அன்றைய தினமே கிளிநொச்சிக்கு வரவுள்ளார். இவர்கள் விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்திக்கவுள்ளதாக வன்னி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

(8ஆம் பக்கம் பார்க்க)

## முல்லை – பரந்தன் சாலையில் உந்துருளி -ஹைஏஸ் வான் விபத்து குடும்பப் பெண் பலி!

முல்லைத்தீவு-பரந்தன் சாலையில் இடம்பெற்ற வாகன விபத்து ஒன்றில் குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் பரந்தன் நோக்கிச் சென்று கொண்டிருந்த உந்துருளி ஒன்றின் மீது அதே திசையில் வந்து கொண்டிருந்த ஹைஏஸ் மோதியதிலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.இவ்விபத்தில் முரசுமோட்டையைச் சேர்ந்த 38 அகவையுடைய துரைராசா குணமணி என்பவர் அவ்விடத்திலேயே உயிரிழந்துள்ளார். இதே சம்பவத்தில் உந்துருளியைச் செலுத்தி வந்த துரைராசா ஜோகேந்திரம் என்பவர் படுகாயமடைந்துள்ளார்.இதேவேளை, இவ்விபத்து இடம்பெற்ற இடத்திற்கு அண்மையில் நேற்றுக் காலை இடம்பெற்ற மற்றொரு விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர். இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் நோயாளர் காவு வண்டி ஒன்றும் உந்துருளி ஒன்றும் மோதியதிலேயே இந்த இருவரும் படுகாயமடைந்துள்ளனர். இவ்விபத்தில் காண்டீபன் (வயது -20) என்ற இளைஞனும், சந்தியா (வயது - 21) என்ற இளம் பெண்ணுமே படுகாயமடைந்துள்ளனர்.

## ஐ.எம்.எப். வதிவிடப்பிரதிநிதி தமிழ்ச்செல்வன் கிளி.இல் சந்திப்பு



(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களை சர்வதேச நாணய நிதியத்தின் சிறிலங்காவுக்கான வதிவிடப்பிரதிநிதி ஜெலிமிக்காட்டர் அவர்கள் நேற்று கிளிநொச்சியில் சந்தித்து உரையாடி உள்ளார்.

நேற்றுக்காலை கொழும்பில் இருந்து விமானம் மூலம் புறப்பட்டு பலாலி விமான நிலையத்தை வந்தடைந்த இவர் அங்கிருந்து வாகனம் மூலம் கிளிநொச்சியை வந்தடைந்து காலை 11.30 மணியளவில் கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் மற்றும் விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணியாளர் புலித்தேவன் ஆகியோரைச் சந்தித்து சுமார் ஒருமணித்தியாலயம் 30 நிமிடங்கள் உரையாடினார்.

சந்திப்புக்கள் யாவும் நிறைவு பெற்றதும் தரைவழிப்பாதையூடாக யாழ்ப்பாணத்தை சென்றடைந்து அங்கிருந்து விமானம் மூலம் கொழும்பைச் சென்றடைந்துள்ளார்.

இச்சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் குறித்த தகவல்கள் வெளியாகவில்லை (லோ)

## அளம்பில், செம்மலை, நாயாறு மீனவர் சிங்கள மீனவரின் அத்துமீறலால் பாதிப்பு

(முல்லைத்தீவு)

சிங்கள மீனவர்களின் அத்துமீறல் மீன்பிடி நடைமுறைகளால் அளம்பில், செம்மலை, நாயாறு மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

சிறிலங்காக் கடற்படையினரது பாதுகாப்புடன் ஏராளமான சிங்கள மீனவர்கள் சுருக்கு வலை மீன் பிடித்தல் முறை மூலம் மீன் பிடித்து வருகின்றனர்.

இந்தச் சுருக்கு வலை மீன்பிடித்தல் முறையானது பிரமாண்டமான கடற்பரப்பில் வலையை நீரில் பாய்ச்சி அதற்கு ஒளி செலுத்துவதாகும். இதனால் தொலைவிலுள்ள

(8ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்புத்துறை வீதிப்பகுதியில் இராணுவத்தினர்தேடுதல் வேட்டை

### வீதியில் சென்றோரின் அடையாளஅட்டைகள் சோதனையிடப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ் சுண்டுக்குழிச் சந்தியிலிருந்து கொழும்புத் துறைக்குச் செல்லும் வீதியைச் சூழவுள்ள பகுதிகளில் இராணுவத்தினர் கடுமையான தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்றுக்காலை கனரக வாகனங்கள் மூலம் அப்பகுதிக்கு வந்திறங்கிய நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் அப்பகுதியெங்கும் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதுடன் மக்களைச் சோதனைக்கெடு

(8ஆம் பக்கம் பார்க்க)

## அபகரிக்கப்பட்ட வீடுகளிலுள்ள சொத்துக்கள் பொலிசாரால் அழிப்பு

### உரிமையாளர்கள் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய்ப் பொலிஸ் நிலையத்தினால் பொதுமக்களின் பத்து வீடுகள் பாவிக்கப்பட்டுவருவதனால் அவ்வீட்டின் சொந்தக்காரர் வீடில்லாது தவிக்கின்றனர்.

சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கைக்குப் பின் யாழ். இராஜ வீதியில் அமைக்கப்பட்டுள்ள இப்பொலிஸ் நிலையத்தினால் பாதிக்கப்பட்டுள்ள இப்பத்து வீட்டுச் சொந்தக்காரர்களும் வாடகை வீடுகளில் வாழ்ந்து வருகின்றனர்.

இந்த வீடுகளின் கதவுகள், ஜன்னல்கள் பொலிசாரால் உடைக்

(8ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா காணி அமைச்சரின் யாழ். விஜயம் திடீர் ரத்து

(கொழும்பு)

சிறிலங்காவின் காணி அமைச்சர் ராஜிதசேனாரட்ன யாழ். குடாநாட்டிற்கு மேற்கொள்ளவிருந்த விஜயம் திடீரென ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள சிறிலங்காவின் தேசிய விளையாட்டு விழா தொடர்பாக ஆராய்வதற்காகவே இவர் யாழ். செல்லவிருந்தார். யாழ். அரச செயலகத்தில் அதிகாரிகளும் விளையாட்டுத்துறை சார்ந்தவர்களும் அவருடைய வருகைக்காக நேற்றுக் காத்திருந்த போதிலும் அவரது பயணம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் திடீரென அறிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் யாழ். குடாநாட்டிற்கு விஜயம் செய்த சிறிலங்காவின் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவிற்கு எதிர்ப்புத் தெரிவிக்க யாழ்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## கைதிகள் கொல்லப்படுவதைத் தடுக்க தே. ம. உரிமை ஆணைக்குழு திட்டம்

(கொழும்பு)

பொலிஸ் காவலிலுள்ள சந்தேக நபர்கள் கொல்லப்படுவதைத் தடுப்பதற்கான திட்டமொன்றை இலங்கைத் தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு ஆரம்பிக்கவிருக்கின்றது.

மொறட்டுகத்தென பொலிஸ் பாதுகாப்பிலிருந்த சுனில் பிரேமச் சந்திரா என்பவரின் மரணத்தையடுத்து மனித உரிமைகள் ஆணைக்குழு இத்தீர்மானத்தை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸ் பாதுகாப்பில் இருப்பவர்களைச் சென்று பார்வையிடுவதற்கும் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

மனிதாபிமானமற்ற முறையில் எவரும் நடத்தப்படுவதைத் தடுப்பதற்கு மக்களுக்கு அறிவுறுத்து

(8ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர்களின் யாழ். விஜயத்தை அனுமதியோம்; இடம்பெயர்ந்தோர் சங்கங்களின் சமாசம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

எமது இயல்பு வாழ்விற்கான தடைகள் அகற்றப்படாது நடைபெறும் இலங்கை அமைச்சர்களின் யாழ். இற்கான விஜயத்தை நாம் ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை என்றும் இத்தகைய பயணங்கள் எம்மை ஏமாற்றும் சுற்றுலாக்களாகவே நாம் கருதுவோம் என்றும் சுட்டிக்காட்டி வலி. வடக்கு இடம்பெயர்ந்தோர் சங்கங்களின் சமாசம் மகஜர் ஒன்றினை வெளியிட்டுள்ளது.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் விஜயம் செய்த ஜோன் அமரதுங்கவின் விஜயத்தினை எதிர்த்து யாழ். செயலகம் முன்பாக மறியல் போராட்டம் ஒன்றை நடத்திய இவ்வமைப்பினர் இம்மகஜரை வெளியிட்டுள்ளனர். இம்மகஜர் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு, யாழ். இற்கான யு.என்.எச்.சி.ஆர். அலுவலர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களது எதிர்கால நலனைக் கருத்திற் கொள்ளாது இராணுவ நோக்குடன் செயற்பட்டு வரும் அரசின் செயற்பாடுகளே சமாதானத்திற்குப் பெரும் முட்டுக் கட்டையாகவுள்ளது. இவை நீக்கப்பட்டு எமக்கு இயல்பான வாழ்வு தோன்றும் வரை இப்படியான அமைச்சர்களினது விஜயங்களை

(8ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### N.E.C

நீதிமன்று முன்பாக கிளிநொச்சி A/L Day class சகல பாடமும் 13.08.2003 இம்முறை முதன்மை பெறுபேறுகளுக்கு வழிசமைத்த ஆசிரியர் குழாம் ஒன்றிணைந்த சேவையில் ஆரம்பம். அனுமதியை முன்பெறவும். நிர்வாகம். (3622)

### அறிவுடமை கல்வி நிலையம்
**கிளிநொச்சி நகர்**
**(LOGIC)**

**A/L DAYCLASS**

ஆசிரியர்: S. யோகராஜன்
ஆரம்பம்:-20-08-2003புதன் மு.ப.10 மணி(கடந்த ஆண்டு போன்று அனுமதிகள் மட்டுப்படுத்தப்படும்) நிர்வாகி. (3624)

கிளிநொச்சி அறிவுடைமை கல்விநிலையத்தில் O/L Day Class கணிதம், விஞ்ஞானம் பிரத்தியேக வகுப்புக்கள் 13-08-2003 அன்று பி.ப.3.00 மணிக்கு ஆரம்பமாகின்றது. கணிதம்-திரு.எஸ்.கருணாகரன்,விஞ்ஞானம்-திரு.பி.வசீகரன் பத்துவருடகால அனுபவமிக்கவர்களின் ஒருங்கிணைந்த சேவை. நிர்வாகி. (3630)

### அறிவுடமை கல்வி நிலையம்
**கிளிநொச்சிநகர்**

A/L Day Class கலைப்பிரிவு ஆசிரியர் குழு தமிழ்: திரு.எஸ் கணேசலிங்கம்,இந்து நாகரிகம்: திரு எஸ். கனெக்ஸ், புவியியல் : திரு கே. ஞானம், அளவியல்: திரு.எஸ். யோகராஜன், பொருளியல்: திரு.ரீ. திவ்யரூபன். ஆரம்பம் 16-08-2003 சனி-(10மணி)நிர்வாகி. (3626)

### காணி விற்பனைக்கு

இல.201 ஜெயந்திநகர், கிளிநொச்சியில் கட்டுக்கிணறு, கழிப்பறையுடன் 1 ஏக்கர் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். இ.செல்வரெத்தினம்,சர்வ சக்தி நிலையம், ஏ-9 வீதி, கிளிநொச்சி. (3625)

### அறிவுடமை கல்வி நிலையம்
**கிளிநொச்சிநகர்**

A/L Day Class கலை,வர்த்தகப் பிரிவுகள் ஆரம்பம் 16-08-2003 சனி (10மணி) (சகல பாடங்களும் முன்னணி ஆசிரியர்கள் ஒருங்கிணைக்கப்படுகின்றனர்). நிர்வாகி. (3628)


# சிறிலங்கன் எயார் லைன்ஸிற்கு கடந்த ஆண்டு அதிக இலாபம்

(கொழும்பு)

இலங்கைதேசிய விமானசேவை நிறுவனமான 'சிறிலங்கன் எயார் லைன்ஸ்' தனது சேவையில் அதிகரித்த இலாபத்தை கடந்த ஆண்டு பெற்றுள்ளது.

2.1பில்லியன் ரூபா இலாபமாக பெறப்பட்டுள்ளது. இந்த இலாபத் தொகையில் ஏனைய மானிய சேவையின் ஊடாக பெறப்பட்ட இலாபம் இணைக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்கன் எயார்லைன்சின் தனித்த இலாபமாக 1.3பில்லியன் ரூபா பெறப்பட்டுள்ளது.

பொருட்களைக் கையாள்வதன் ஊடாகப் பெறப்படும் இலாபம் அதிகரித்து வருகின்றது. கடந்த 2001ஆம் ஆண்டு ஏற்பட்ட தாக்குதலால் விமானசேவை 5.4 பில்லியன் ரூபாவை இழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அரசியல்வாதிகள், பொதுமக்களுக்கிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்தும் நிகழ்வுகள்

(கொழும்பு)

தற்போதைய சமாதான நடைமுறைகள் குறித்தும் நாடு எதிர்நோக்கும் அரசியல் சவால்கள் குறித்தும் பிராந்திய அரசியல்வாதிகளுக்கும் பொதுமக்களுக்கும் இடையில் புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கான நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அரசியல் யாப்பு விவாகர அமைச்சு இந்த நிகழ்ச்சிகளை நடாத்தி வருகின்றது.

சமாதான முயற்சிகளில் ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடுகளை நீக்குவதற்கு இந்த நிகழ்ச்சிகள் உதவியாக இருக்கும்.

'உதனய' என்ற பெயரில் இந்த நிகழ்ச்சிகள் நாடு முழுவதிலும் நடத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# கிளிநொச்சியில் நேற்று மூவர் பாம்புக்கடிக்கிலக்காகினர்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மைக்காலமாக பாம்புகளின் தொல்லை அதிகரித்து வருவதனைக் காணக்கூடியதாகவுள்ளது.

நேற்றுக் காலை முதல் நண்பகலுக்கிடையில் மூவர் பாம்புக் கடிக்கிலக்காகி கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைமேற்கொண்டு வருகின்றனர்.

நேற்றைய தினம் வட்டக்கச்சி மாயவனூரைச் சேர்ந்த ஆரோக்கியம் (வயது67), கிளிநொச்சி டிப்போ வீதியைச் சேர்ந்த இ.கஜித்குமார் (வயது-21), பூநகரி மட்டுவில் மேற்கைச் சேர்ந்த கோ. குணசேகர் (வயது-15) ஆகிய மூவருமே பாம்பினால் கடியுண்டதன் விளைவாக கிளி.மாவட்ட அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (சோ)

## ஊரக எ.பேரவை தெரிவு

துணுக்காய்ப் பிரதேசத்தின் மல்லாவி கிராம சேவையாளர் பிரிவில் தேசிய எழுச்சிப் பேரவை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 9ஆம் திகதி பிற்பகல் 4.00 மணிக்கு கிராம சேவையாளர் த. இரத்தினகோபால் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் ஊரகஎழுச்சிப்பேரவை தொடர்பான கருத்துக்களை துணுக்காய்ப் பிரதேசப் பொறுப்பாளர் சி. சேரன் அரசியல்துறையைச் சேர்ந்த பொ. தனம் ஆகியோர் நிகழ்த்தினர். தொடர்ந்து பேரவைத் தெரிவு இடம்பெற்றதுடன் கிராமத்தின் தேவைகள், வளர்ச்சிகள் தொடர்பான கருத்துரைகளும் முன்வைக்கப்பட்டன. (பா)

# பயிற்சியை நிறைவு செய்தோருக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது

(அலுவலகச் செய்தியாளர்)

சுருக்கெழுத்து, தட்டெழுத்து மற்றும் தையல் பயிற்சியினை நிறைவு செய்த பெண்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் நேற்றுக் காலை 9.00 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட இலங்கை செஞ்சிலுவைச்சங்க கிளை மண்டபத்தில் நடைபெற்றது.




சங்கச் செயலர் க.கணேஸ் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் கிளி. வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் சிவசாமி கலந்துகொண்டு பயிற்சியினை நிறைவு செய்த பெண்களுக்கு சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவித்தார்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளி.மாவட்டக் கிளையினரால் நடாத்தப்பெற்ற மேற்படி பயிற்சி நெறியில் 70 பெண்கள் பயிற்சியினை நிறைவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)


உ

ஓம் ஸ்ரீ ராம ஜெயம்

## "ஓம் நமோ நாராயணாய"

# ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் கோவில் வட்டக்கச்சி, கிளிநொச்சி.

## வருடாந்தப் பெருவிழா-2003

*பரந்தாமன் அடியார்களே!*

*மேற்படி ஆலய வருடாந்தப் பெருவிழா (12.08.2003) ஆடி மாதம் 27ம் நாள் செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.*

| | | |
|---|---|---|
| 1ம் (12.08.2003) திருவிழா | கொடியேற்றம் | - ஸ்ரீ ரங்கநாதர் வீதி மக்கள். |
| 2ம் (13.08.2003) திருவிழா | ஸ்ரீ ராம வடிவம் | - மாயவனூர் மக்கள். |
| 3ம் (14.08.2003) திருவிழா | இலட்சுமி நாராயணர் | - ஆறுமுகம் வீதி மக்கள். |
| 4ம் (15.08.2003) திருவிழா | அரங்கநாதர் திருக்கோலம் | - கட்சன் வீதி மக்கள். |
| 5ம் (16.08.2003) திருவிழா | ஆண்டாள் உற்சவம் | - சிவிக்சென்ரர் மக்கள். |
| 6ம் (17.08.2003) திருவிழா | பகல் - மோகினி வடிவம் | - சில்வா, சிவசுந்தரம் வீதி மக்கள். |
| | மாலை - கரிகரமுகூர்த்தம் | - விநாயகர் வீதி மக்கள். |
| 7ம் (18.08.2003) திருவிழா | வெண்ணைத்திருவிழா | - புதுப்பாலம் பகுதி மக்கள். |
| | கண்ணன் அவதாரம் | |
| 8ம் (19.08.2003) திருவிழா | வேட்டைத்திருவிழா | - ஸ்ரீரங்கநாதர் 2ம்பகுதி மக்கள். |
| | மாலை - சப்பறம், | - வேட்டைத்திருவிழா செல்வா வீதி, |
| | இரவு - கிருஷ்ண ஜெயந்தி | - ஐயனார் ஆலயத்தில் இடம்பெறும். |
| 9ம் (20.08.2003) திருவிழா | தேர்த்திருவிழா | |
| | மாலை -உறியடி உற்சவம் | - வட்டக்கச்சி இராமநாதபுரம், கிளிநொச்சி [illegible] |
| 10ம் (21.08.2003) திருவிழா | தீர்த்தத்திருவிழா | - த.பெ..சந்தி சாரதாம்பாள்,மாவடி அம்மன், [illegible] |
| 11ம் (22.08.2003) திருவிழா | பூங்காவனம் | |
| | பகல் - சங்காபிஷேகம் | - இராமநாதபுரம் 5ம்,6ம், 7ம்பகுதி |
| | மாலை - திருக்கல்யாணம் | - கல்மடுநகர் மக்கள். |
| 12ம் (23.08.2003) திருவிழா | ஆஞ்சநேயர் உற்சவம் | |



**ஓம் ஸ்ரீ ராம் ஜெய் ராம் ஜெய் ஜெய் ராம்**

குறிப்பு:- தேர், தீர்த்தம் உற்சவங்கள் அதிகாலை 5.00 மணிக்கு ஆரம்பமாகும். தினமும் பகல் திருவிழாக்கள் காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகி பகல் 11.00 மணிக்கு நிறைவுறும். மாலைத் திருவிழாக்கள் மாலை 5.00 மணிக்கு ஆரம்பமாகி தினமும் 8.00 மணிக்கு நிறைவுறும். கிருஷ்ண பெருமானின் திருவிழா நிகழ்ச்சிகளைக் காண காலையும், மாலையும் வருகைதந்து அவனருள் பெறுவீர்களாக.

சுபம்

ஆலய பரிபாலன சபையும், உபயகாரர்களும் மாயவனூர்,கிளிநொச்சி.

*பிரசுர அன்பளிப்பு:-*

**அ.மு.சுமணி அடைவு பிடிப்பகம்**
முதன்மைச்சாலை,கிளிநொச்சி.
(சி-8335)

*பிரசுர அன்பளிப்பு:-*

**குவி பல்பொறி உதிரிகள் வாணிபம்**
முதன்மைச்சாலை,கிளிநொச்சி.
(சி-8336)




அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் வீசிய சூறாவளியால் கார் ஒன்றின் மீது விழ்ந்துள்ள மரமும் பாதிக்கப்பட்டோருக்கு வழங்கப்படுவதற்காக உதவிப் பொருட்களை கொண்டு செல்லும் மீட்புப் படையினரும் (இதன்போது 500 வீடுகள் சேதமடைந்தன)

# எருமை, கழுதையின் தாகம் தீர்க்கும் குளிர்பானங்கள்!

பெப்சி, கொக்கோகோலா உள்ளிட்ட 12 வகையான குளிர்பானங்களில் புற்றுநோயை ஏற்படுத்தக் கூடிய பூச்சி கொல்லிகள் கலந்து இருப்பதாக ஆய்வறிக்கைகள் கூறியதையடுத்து, ஈரோட்டில் பாரதீய ஜனதாவின் இளைஞரணியினர்பெப்சி, கொக்கோகோலா என்பவற்றை கழுதை, எருமை மாடுகளுக்கு குடிக்கக் கொடுத்தனர்.

அது மட்டுமன்றி எருமை மாடு ஒன்றில் அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ்சின் படத்தினை ஒட்டி விட்டு, அந்த எருமைக்கும் பெப்சி, கொக்கோகோலாவை குடிக்க கொடுத்து அதன் மீதும் ஊற்றினர்.

இதுபோலவே டில்லியில் சிவ சேனா கட்சியினரும் கொக்கோகோலா உள்ளிட்ட பானங்களை உடைத்து சாக்கடையில் ஊற்றிவிட்டு அதன் பிளாஸ்ரிக் போத்தல்களை எரித்தனர். நாடாளுமன்ற உணவு விடுதியிலும் மென்பானங்கள் அகற்றப்பட்டுள்ளன.

## குண்டு வெடிப்பில் 20 பேர் பலி

இந்தியாவின் அகமதாபாத்தில் குடிசை ஒன்றில் குண்டொன்று வெடித்ததில் இருபது பேர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் 20 பேர் காயமடைந்துள்ளனர்.மக்கள் நெருக்கம் நிறைந்த பகுதியிலேயே மேற்படி குண்டு வெடித்ததாக தெரிவிக்கப்படுகிறது. இதனை அடுத்து அங்கு பொலிசார் பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# ஈராக்கில் ஆக்கிரமிப்பாளருக்கு எதிராக மக்கள் போராட்டம் வலுவடைகிறது!

## – வீதிகளில் இறங்கியும் தாக்குதல்

**ஈராக்கை ஆக்கிரமித்திருக்கும் அமெரிக்க-பிரிட்டிஷ் படையினருக்கு அந்நாட்டில் நாளுக்கு நாள் எதிர்ப்பு அதிகரித்து வருகின்றது. இதன் காரணமாக ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரான பாலூஜா நகரில் நேற்று முன்தினம் பெரிய ஆர்ப்பாட்ட கண்டனப் பேரணி நடைபெற்றுள்ளது.**

பேரணியில் கலந்து கொண்டவர்கள் தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தும் முகமாக வீதிகளில் சென்ற வாகனங்களை இடைமறித்து, கற்களால் எறிந்தனர்.

இந்தத்தாக்குதலில் ஒரு படைவீரர் படுகாயம் அடைந்துள்ளார்.



பஸ்ராவில் நடந்த ஆர்ப்பாட்டத்தில்

அங்குள்ள பிரிட்டிஷ் படையினருக்கு எதிராக கோஷங்களையிட்டதோடு நாட்டைவிட்டு வெளியேறுமாறும் அவர்கள் தமது எதிர்ப்பில் வெளிப்படுத்தினர்.

இதேபோல் சதாம் ஹுசைனின் சொந்த ஊரான திக்றிட்டிலும் எதிர்ப்பு வலுத்துள்ளது.

அங்குள்ள அமெரிக்கப் படையினர் மீது ஈராக்கியர்கள் மறைந்திருந்து தாக்குதல்கள் நடத்தவதுடன் கண்ணிவெடிகள் மூலம் இராணுவ வாகனங்களைத் தகர்த்தும் வருகின்றனர்.

இதனால் அங்கு பதட்டம் நிலவுகின்றது.

மண்ணுக்குள் மறைத்து வைத்திருக்கும் கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் அமெரிக்கப் படையினர் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை, நேற்று முன்தினம் நடைபெற்ற தாக்குதலொன்றில் இரு அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் சதாமையும் அவரது ஆதரவாளர்களையும் பிடிக்கும் நடவடிக்கைகளுக்காக அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் படைகள் தீவிர தேடுதல்களையும் மேற்கொண்டு வருகின்றன.

# சமாதான காலத்தில் 50 பேர் உயிரிழப்பு!

நேபாளத்தில் கடந்த ஜனவரியில் தொடங்கப்பட்ட அரச மாவோயிஸ்ட் தீவிரவாதங்களிடையேயான சமாதானப் பேச்சுக்களையடுத்து இதுவரை 50 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்தத் தகவலை நேபாள மனித உரிமைகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

மாவோயிஸ்ட் தீவிரவாதிகளே அதிக தாக்குதல்களை நடத்தியுள்ளதாக அந்தத்தரப்பு சுட்டிக்காட்டியதுடன் இருதரப்பினருக்குமிடையே நம்பிக்கையீனமும் சந்தேகமும் தொடரும் நிலையில்தான் இந்த மனித உயிர் இழப்பு ஏற்படுவதாகவும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

# லைபீரிய சனாதிபதி பதவி விலகினார்

## அமைதியை விரும்புவதாகவும் அறிவிப்பு

(மொன்றோவியா)

லைபீரிய சனாதிபதி சாள்ஸ் டெய்லர் தனது அதிகாரங்களில் இருந்து விடைபெற்றுள்ளார். இவரது பிரியாவிடை உரை நேற்று முன் தினம் நள்ளிரவு லைபீரியாவில் ஒளிபரப்பப்பட்டது.

லைபீரிய தேசியக் கொடியின் கீழ் சாள்ஸ் ரெய்லர் ஆற்றிய உரையில் லைபீரியாவின் மீதான தீராத பற்றுதலே தனது ராஜினாமாவுக்கான காரணம் எனத் தெரிவித்துள்ளார்.

லைபீரியாவில் தொடர்ந்தும் இரத்தக்களறி ஏற்படுவதை தனது இராஜினாமா தடுத்து நிறுத்துமானால் அதுவே தனக்கு போதுமானது என்று அவர் கூறியுள்ளார்.

நைஜீரியாவில் அரசியல் தஞ்சம் தொடர்பான எந்த விடயத்தையும் டெய்லர் தான் ஆற்றிய பதினைந்து நிமிட உரையில் குறிப்பிடவில்லை.

நான் எனது பதவியையும் அதிகாரங்களையும் நாட்டிற்காக தாரைவார்க்கிறேன் இதை மக்கள் புரிந்து கொள்வார்கள் என தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.



அத்துடன் இறுதியாக நான் மீண்டும் சனாதிபதியாக வருவேன் என வலியுறுத்தினார்.



மெக்ஸிகோவில் கிளர்ச்சிவாதிகளின் ஒதுக்குப்புறம் ஒன்றில் நடைபெறும் கூட்டத்தில் தலைவரின் உரையை அவதானிக்கும் கூட்டத்தினர்

# ஆப்கானிஸ்தான் அமைதிப்பணி நேட்டோ படைகளிடம் ஒப்படைப்பு

அரை நூற்றாண்டுக்கும் மேலாக மேற்கு ஐரோப்பிய நாடுகளில் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டு வந்த நேட்டோப்படைகள் முதல் தடவையாக ஐரோப்பாவிற்கு வெளியே செயற்பட தொடங்கியுள்ளது.

நேற்று முதல் ஆப்கானில் அமைதிகாக்கும் பொறுப்பை நேட்டோ ஏற்றுள்ளது. இதற்காக காபூலில் நடைபெற்ற நிகழ்வில் பன்னாட்டுப் படைகளின் தற்போதைய தலைவர்களான ஜேர்மன், டச் அதிகாரிகள் நேட்டோவிடம் பொறுப்பை ஒப்படைத்துள்ளார்கள்.

நேட்டோ எனப்படும் வடஅத்திலாந்திக் ஒப்பந்த அமைப்பில் 19உறுப்பு நாடுகள் சர்வதேச பயங்கரவாதத்தின் சவாலை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

# நெடுமாறன் உட்பட ஐவர் மீதான குற்றச்சாட்டுக்கள் நீதிமன்றில் பதிவு

(சென்னை)

பொடோ சட்டத்தில் கைது செய்யப்பட்ட தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவர் பழநெடுமாறன் உட்பட 5 பேர் மீது குற்றச்சாட்டுக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்தியாவில் தடைசெய்யப்பட்ட விடுதலைப்புலிகளை ஆதரித்துப் பேசியதற்காக பழநெடுமாறன் மற்றும் அவரது இயக்கத்தைச் சேர்ந்த 5 பேர் பொடோ சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே.

இவர்கள் மீது குற்றப் பத்திரிகையில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் சென்னையை அடுத்த பூந்தமல்லி பொடோ நீதிமன்றத்தில் நீதிபதி ராஜேந்திரன் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

விடுதலைப்புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்டது என்று தெரிந்தும் அதற்கு ஆதரவாக இவர்கள் செயற்பட்டதாகவும் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்ததாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

# விண்வெளி வீரரின் திருமணம் இனிதே நிறைவேறியது!

உலகத்திருமணங்களைத் தாண்டி உலகின் முதலாவது விண்வெளித் திருமணம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

ரஷ்ய விண்கலத்தில் 380கிலோமீற்றர்களுக்கு அப்பால் பூமியை சுற்றும் விண்வெளி ஓடத்தில் பணியாற்றும் ரஷ்யாவில் பிறந்த அமெரிக்க வீரர்யூரிமல்லென்ஸ்கோ தனது திருமணத்தை நேற்று முன்தினம் முடித்துக்கொண்டார்.

நாசாவின் ஜோன்சன் விண்வெளி நிலையத்தில் இருந்து மனைவியும் விண்வெளியில் கணவரும் பரஸ்பர உறவுகளைப் பரிமாறிக்கொண்டார்கள்.

இந்த வணக்கங்களையும் உறவுகளையும் நாசாவில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட 200பிரதிநிதிகள் நவீன தொழில் நுட்பத்தின் மூலம் கண்டறிந்து மகிழ்ந்தனர்.

புதிய மணப்பெண் ஒக்டோபர் மாதம் பூமிக்கு வரும் கணவருடன் இணைய இருக்கிறார்.



பாக்தாத்திற்கு அண்மையில் வாகனங்கள் பழுதுபார்க்கும் பெற்றோல் குண்டுவெடிப்பில் ஏற்பட்ட தீயை அணைக்கும் ஈராக்கிய தீயணைப்புப் படை.

# உலைக்களம் கவிதை நூல் திருமலையில் அறிமுக விழா

(திருமலை)

தமிழீழ கலைபண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்களால் எழுதப்பட்ட உலைக்களம் கவிதை நூல் அறிமுக விழா நேற்றுமுன்தினம் மாலை திருமலை நகர மண்டபத்தில் நடைபெற்றது. முதல் பிரதியை சம்பூர் அரசியல்துறைப் பொறுப்பாளர் உதயவாணன், குறள் முதம் ஆசிரியர் சோதிக்கு வழங்கினார்.

இந்நிகழ்வின் இறுதியில் கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்கள் உரையாற்றும்போது,

விடுதலைப்புலிகள் யுத்தத்தை வெறுக்கின்றனர். யுத்தத்தினால் ஏற்பட்ட அவலங்கள், கொடுமைகளை அனுபவித்தவர்கள் நாங்கள். மாவீரர் வித்துடல்களுக்கு மலர் அள்ளிப்போட்டே எமது கைகள் புண்ணாகிப் போய்விட்டன. அப்படியாக யுத்தத்தின் கொடுமைகளை நாங்கள் அனுபவித்துள்ளோம். நாங்கள் யுத்தத்தை வெறுக்கிறோம். ஆனால் யுத்தம் எங்கள் மீது திணிக்கப்பட்டால், எமக்கு வேறு வழியில்லை. போர் இலக்கியம் என்பது எங்கிருந்தும் படைக்கலாம். போராட்ட இலக்கியம் என்பது அந்த மண்ணில் இருந்துதான் படைக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

# புலிகளிடம் இடைக்கால நிர்வாகத்தை வழங்கினால் நாம் இயல்பு வாழ்க்கைக்கு திரும்ப வழியேற்படும்

## வலி.வடக்கு இடம்பெயர்ந்தோர் மகஜர்

(யாழ்ப்பாணம்)

**தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகளிடம் இடைக் கால நிர்வாகம் ஒன்றினை வழங்கி அதனூடாக எங்களுக்கான இயல்பான வாழ்க்கையையும் இயல்பான மீள்குடியேற்றங்களுக்கும் வழிசமைத்து தருமாறு கோரி வலி.வடக்கில் இருந்து இடம்பெயர்ந்தோர் சங்கப் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

நேற்று அமைச்சர் ஜோன் அமரதுங் கவின் அரச செயலக வரவுக்கு எதிர்ப் புத் தெரிவித்து நேற்று முன்தினம் மறியலில் ஈடுபட்ட இடம்பெயர்ந் தோர் சங்கப் பிரதி நிதிகள் மேற்படி கோரிக்கை அடங்கிய மகஜர்களைக் கையளித்துள்ளனர். தொடர்ந்து இராணுவத் தாக்குதல்கள் நெருக்கு வாரங்கள் இடம்பெற்று வருகின்றது. இது புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னரும் தீர்ந்தபாடில்லை. எனவே எம்மால் புலிகளின் கையில் பலம் பொருந்திய இடைக்கால நிர்வாகத்தை வழங்கினால் மாத்திரமே எங்களுக்கு இயல்பு வாழ்க்கை திரும்பும் என்பதில பூரண நம்பிக்கை இருக்கிறது. இராணுவத்தினர் யாழ். குடாநாட்டில் இருக்கத் தேவையில்லை எனவும் மேற்படி மகஜரில் குறிப்பிடப்பட்டுள் ளது. இம் மகஜர்கள் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு யாழ்.மாவட்ட அரச அதிபர் மற்றும் மனித உரிமை ஆணைக் குழுவின் தலைமைக் காரியாலயம், யு.என்.எச்.சி.ஆர் ஆகிய வற்றுக்கு அனுப்பி வைக்கப்பட் டுள்ளது. (33)

# பேச்சுவார்த்தைக் குழுவிலிருந்து விலக அமைச்சர் மிலிந்த மொறகொட விருப்பம்

(கொழும்பு)

சமாதானப் பேச்சுக்குழுவிலிருந்து தம்மை நீக்கிவிடுமாறு சிறிலங்கா வின் பொருளாதார மீள்கட்டமைப்பு அமைச்சர் மிலிந்தமொறகொட பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரியுள்ளார். அமைச்சரின் கோரிக் கைக்குப் பிரதமர் இதுவரை அனு மதி வழங்க வில்லை என்று அரசாங்க வட்டாரங் கள் தெரிவித்துள் ளன.

இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக விடுதலைப்புலிகள் ஆராய் ந்து பதில் ஒன்றை அரசாங்கத்திற்கு வழங்கிய பின்னர் இது தொடர்பான பேச்சுவார்த்தை இடம் பெறவுள்ள தென எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் பேச்சுவார்த் தைக்கான குழுவில் தான் பங்கு பற்றுவதைத் தவிர்த்துக் கொள்ள விரும்புவதாக அமைச்சர் மிலிந்த மொறகொட பிரதமரிடம் கேட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

# முல்லை.மாவட்டத்திற்கு நில அளவையாளர் இல்லை

(ஒட்டுசுட்டான்)

முல்லை. மாவட்டத்திற்கு நில அள வையாளர் ஒருவரும் நியமிக்கப்படா ததால் காணிகள் சம்பந்தமாகவோ அல்லது பிரதேச எல்லைகள் தொடர் பாக அளவைகளை மேற்கொண்டு திட்டவரைபுகளை மேற்கொள்ள பெரும்சிரமம் ஏற்பட்டுள்ளது என முல்லை. மாவட்ட அரச அதிபர் திரு மதி இமெல்டா சுகுமார் தெரிவித் தார். வெளிமாவட்டங்களில் இருந்து நில அளவையாளர்கள் இங்கு வரத்தயங்குகின்றனர் எனவும் சமீபத்தில் ஐந்து பேர் கொண்ட குழு யாழ்.மாவட்டத்தில் இருந்து வருகை தந்தவேளை, குறித்த வேலைகள் மட்டுமே முடிக்கப்பட்டது எனவும் அவர் கூறினார். (05)

# சுற்றயல் கூறு மருத்துவமனையில் கிளினிக் நடைபெறும் நாட்கள்

(அலுவலக செய்தியாளர்)

நெடுங்கேணி சுற்றயல் கூறு மருத்துவமனையில் வெளிமாவட்டங் களிலிருந்து வருகை தந்து நடமா டும் சேவை மூலம் பற்கிளினிக், தாய்சேய் போசாக்குக் கிளினிக், மனநோயாளர்களுக்கான கிளினிக் என்பன நடைபெறும் திகதிகள் அறி விக்கப்பட்டுள்ளன.

இதன் அடிப்படையில் பற்கிளினிக மாதத்தின் இரண்டாவது வெள்ளிக் கிழமையும் தாய்சேய் கிளினிக் மாதத்தின் மூன்றாவது புதன் கிழமையும் மன நோயாளர்க ளுக்கான கிளினிக் மாதத்தின் நான்காவது செவ்வாய்க் கிழமையும் நடைபெறுமென மருத் துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எனவே மேற்படிநோயாளர்களுக்குச் சிகிச்சை பெறவிரும்பும் அனைத்து நோயாளர்களும் இந்த ஒழுங்குக் கமைவாக வருகை தந்து சிகிச்சை பெற்றுச் செல்லுமாறு கேட்டுக்கொள் ளப்பட்டுள்ளனர். இந்த ஒழுங்கி லேயே தொடர்ந்தும் சிகிச்சைகள் நடைபெறும் எனவும் மருத்துவ மனை வட்டாரங்கள் தெரிவிக் கின்றன. (லோ)

# மாங்குளம்-ஒலுமடு இடையிலான பாலத்தால் பேராபத்து ஏற்படலாம்!

## -பிக்கப் வாகனமொன்றும் விபத்தில் சிக்கியது

(ஒட்டு சுட்டான்)

மாங்குளத்திற்கும் ஒலு மடுவிற்கும் இடையில் உள்ள பாலம் ஒன்று போக்கு வரவுத்துக்குப் பாதுகாப்பு இல்லா மையினால் சாரதிகள் வாகனங்க ளைச் செலுத்த அஞ்சு கின்றனர்.

இதேவேளை இப்பாலம் ஆபத் தானது என்றோ அல்லது ஒடுங்கிய பாலம் என்றோ எவ்விதமான அறி வுறுத்தல்களுக்கான அடையாளங் களும் இல்லை. மாங்குளம் முல்லைத் தீவு வீதி திருத்தப்பட்டு வருகின்றமை யினால் சாரதிகளும் வாகனங்களை வேகமாகச் செலுத்துகின்றனர்.

இதனால் கடந்த வியாழக்கிழமை வேகமாக வந்த மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவைச் சேர்ந்த பிக்கப் ஒன்று இப் பாலத் தினூடாக வீழ்ந்து சேதத்துக்குள் ளாகியுள்ளது குறிப்பிடத்தக்கது. (05)

# முத்துஐயன்கட்டு பகுதிக்கு பேருந்துச் சேவை வேண்டும்

(ஒட்டுசுட்டான்)

முத்துஐயன்கட்டுப் பகுதிக்கு பயணிகள் பேருந்து சேவை இன்மையால் மக்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

பாதைகள் திருத்தப்பட்டும் இன்னும் பேருந்து சேவை நடைபெறாமையால் புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு சென்று திரும்பும் நோயாளிகள் நான்கு ஐந்து கிலோ மீற்றர் தூரம் நடந்து செல்லவேண்டியுள்ளது என மக்கள் ஆதங்கப்படுகின்றனர்.

இதேவேளை, இப்பகுதி பாதையினை முல்லை. மாவட்ட பொருண்மிய மேம் பாட்டு நிறுவனத்தாலும் பொது மக்களாலும் திருத்தப்பட்டது குறிப்பிடத் தக்கது. (05)

# 12 வேங்கைகள் நினைவுத் தூபி மீண்டும் அமைக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

குமரப்பா, புலேந்திரன் உட்பட பன் னிரு வேங்கைகளின் நினைவுத் தூபி மீண்டும் வல்வெட்டித்துறை-தீருவி லில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இவர்களது நினைவாக தீருவிலில் பிரமாண்டமாக அமைக்கப் பட்டிருந்த நினைவுத் தூபிகள் மற்றும் உருவச்சிலைகள் 1996 ஆம் ஆண்டு சிறிலங்காப் படையினர் யாழ்குடா நாட்டை ஆக்கிரமித்தபோது தகர்த் தனர்.

வல்வெட்டித்துறை மக்களின் ஒத்து ழைப்புடன் வல்லை மக்கள் ஒன்றியம் இதை மீள அமைப்பதற்கு நடவடிக்கை களை மேற்கொண்டுள்ளது.

# நயினாமடு திலீபன் மருத்துவமனையின் சேவையால் மக்கள் பெரும் பயனடைவு!

## - பாம்புக் கடிக்கு அதிகளவானோர் சிகிச்சை

(அலுவலக செய்தியாளர்)

நயினாமடு தியாக தீபம் திலீபன் மருத்துவமனையில் பாம்புக்கடிக்கே தினமும் அதிகளவானவர்கள் சிகிச்சை பெற்று வருவதாக மேற்படி மருத்துவமனை மருத்துவர் தில்லை தெரிவித்தார்.

ஓயாத அலைகள் -03 நடவடிக்கை மூலம் மீட்கப்பட்ட வவுனியா மாவட் டத்தின் நயினாமடு பகுதியில் அமைந் துள்ள இவ் மருத்துவமனை மூலம் அனந்த புளியங்குளம், மதியாமடு, பரந்தன் ஆகிலடி, கரப்புக்குத்தி, சின் னப்பூவரசங்குளம் , விஞ்ஞானகுளம் தச்சடம்பன் சேமமடு, பரந்தன் நயினாமடு போன்ற பல்வேறு பகுதி களைச் சேர்ந்த பெருமளவிலா னோர் சிகிச்சை பெற்று வருகின் றனர்.

பாம்பு மற்றும் விஷ ஜந்துகளால் கடியுண்டு சிகிச்சை பெறுபவர்களே அதிகமானவர்கள் எனவும் இப்பகுதி களில் நாகபாம்பு புடையன், சுருட்டை ஆகிய கொடிய விஷப்பாம்புகளே அதிகம் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தற்போது பெய்துமழை யின் பின்னர் மலேரியா நோயின் தாக்கம் இவ்மருத்துவமனைக்கு உட்பட்ட பகுதிகளில் அதிகரித் திருப்பதாகவும் மாதந்தோறும் 1000பேருக்கு மேற்பட்டவர்கள் சிகிச்சை பெற்றுவருவதாகவும் இம்மருத்துவமனை அமைந்துள்ள இடத்தில் இருந்து பலமைல்கள் தொலைவிலேயே பிற மருத்து வமனைகள் அமைந்துள்ளன. இதனால் தியாக தீபம் திலீபன் மருத்துவமனை இப்பகுதியில் அமைக்கப்பட்டிருப்பதால் மக்கள் பெரும் பயன் அடைந்து வருவதுடன் பெருமளவு உயிர் இழப்புக்களை யும் தடுக்க முடிகிறது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (லோ)

# அனுபவமற்ற கனரக வாகன சாரதிகளால் அபிவிருத்திப் பணிகள் பெரிதும் பாதிப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது புனரமைப்புப் பணிகளில் ஈடுபட்டுவரும் கனரகவாகனங்களின் ஓட்டிகள் பலர் பூரண அனுபவமற்றவர்களாக உள்ளதனைக்



அறியக்கூடியதாகவுள்ளது.தற்போது கிளிமாவட்ட வீதிப்புனரமைப்புப் பணிகளில் ஈடுபட்டுவரும் கனரக வாகனம்(புல்டோசர்), ஓட்டிகள் புல்டோசர் போன்ற இயந்திரங்களை இயக்குவதில் பூரண அனுபவமின்மை காரணத்தினால் வீதிகளைப் புனரமைப்பதில் பலத்த சிரமங்களை இவ் இயந்திர ஓட்டுநர்கள் எதிர்கொள் வதனை அவதானிக்க முடிகின்றது.

அண்மையில் பூநகரிப் பிரதேசத்தில் புல்டோசர் ஒன்று வீதிப்புனரமைப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டபொழுது மேற்படி புல்டோசர் ஓட்டுநரால் பணிகளைச் சீராக நடைமுறைப்படுத்த இயலாததைக் கண்ணுற்ற உயர் அதிகாரி ஒருவரால் மேற்கொண்டு பணியினை தொடரவிடாது தடுத்து நிறுத்தப்பட்டதாகவும் தெரியவந் துள்ளது.

அனுபவமற்றவர்கள் மேற்படி பணியில் ஈடுபடுத் துவதன் காரணமாக புனரமைப்புப் பணிகள் தாமதமா வதுடன் பணிகளின்போது வீண் விரயமாகும் நேரத்திற்கு மேலதிக கூடுதல் பணத்தினை வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதெனவும் கிளிமாவட்ட செயலக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# பரந்தன் பிரதேசத்தில் மாதர் சங்கம நிகழ்வு

பரந்தன் இ.ம.வித்தியாலத்தில் உமையாள்புரம் மாதர் சங்கத் தலைவி சாந்தி தலைமையில் கடந்த சனியன்று பிற்பகல் சங்கம நிகழ்வு இடம்பெற்றது. முதல் நிகழ்வாகப் பொதுச் சுடரினை அரசியல்துறை மகளிர் நிர்வாகப் பொறுப்பாளர் பருதி ஏற்றிவைக்க, தேசியக் கொடியினைக் கிளி/ மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முரளி ஏற்றிவைத்தார். 2ம் லெப் மாலதியின் திருவுருவப் படத்திற்கான ஈகச் சுடரினைப் பரந்தன் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் சுதா ஏற்றிவைக்க படத்திற்கான மலர்மாலையினைக் கிளிநொச்சிப் பிரதேசப் பெண்கள் மேம்பாட்டுப் பொறுப்பாளர் கரிகா லினி அணிவித்தார்.

இந் நிகழ்வில் கிளி/மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முரளி, அரசியல்துறை மகளிர் துணைப் பொறுப்பாளர் தமிழ்விழி ஆகியோர் கருத்துரை வழங்கினார் கள் இந்நிகழ்விற்கு 200 ற்கு மேற் பட்ட பெண்கள் கலந்து கொண்டனர்.

# தகவல் தொழில்நுட்பத்துறையில் உயிர்பொருள்

அறிவியல் உலகில்

கணினி ஒரு தானியங்கி இயந்திரமாயினும் அதனைச் செயற்படுத்த அத்துறையில் பலர் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் உயிர்பொருள் **(Life ware)** என அழைக்கப்படுகின்றனர் என கடந்த வாரம் பார்த்தோம். இவ்வாறானவர்கள் 3 வகைகளாக பிரிக்கப்படுகின்றனர் எனவும் பார்த்தோம்.

இவர்களில் அடிப்படையில் தகவல் தொழில் நுட்பத்துறையில் கீழ்க்கண்டவாறு பிரிக்கப்படுகின்றனர். அவர்கள் பதவிப் பிரிவுகளை வைத்து இவ்வாறு அழைக்கப்படுகின்றனர்.

### 1. தகவல் உள்ளீட்டாளர்கள்

தகவல் உள்ளீட்டாளர் **(Data entry Operator)** என்பது கணினித் துறையில் மிகவும் அடிப்படையான பதவி யாகும். தகவல்களைப் பார்த்து விசைப்பலகையூடாக கணினிகளுக்கு வழங்குபவர்கள் இவர்கள். விரைவாகவும் பிழையின்றியும் தகவல்களை உள்ளீடு செய்வது இவர்களின் பணியாகும்.

### தகவல் உள்ளீட்டு மாற்றுனர்

இவர்கள் தகவல் உள்ளீட்டாளர்கள் கணினிக்கு வழங்கிய தகவல்களை பிழை திருத்தும் மென் பொருள்களின் உதவியுடன் திருத்தியமைத்து பொருத்தமானவை புவத்தில் பெறுபவர்கள். இதனைத் தாள்களில் அச்சிட்டு எடுப்பதும் இவர்களது பணியாகும். பொதுவாகத் தகவல் உள்ளீட்டாளர்களாக இருந்து அனுபவம் பெற்றவர்கள் தகவல் உள்ளீட்டு மாற்றுனர்கள் **(Data entry Conversion Operetors)** ஆக பணிபுரிவர்.

### இலத்திரனியல் தரவு நிரற்படுத்தும் மேலாளர்

இலத்திரனியல் தரவு நிரற்படுத்தும் மேலாளர் **(EDP Manager)** கணினி மூலம் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளை மேலாண்மை செய்து சரியான வெளியீடுகளை வழங்குபவராவார். உரிய இடத்துக்கு அனுப்பப்படும் வெளியீடுகளில் தவறுகள் இருப்பதாக முறைப்பாடு வரின் அவற்றை சீர் செய்வதும் அவ்வாறான தவறுகள் நேராது கண்காணிப்பதும் அவரது பணியாகும்.



### பயிற்சி செயல்முறையாளர்

செய்நிரல்களை எழுதுவதற்குப் பயிற்சி பெறுவோர் பயிற்சிச் செயல்முறையாளர் **(Trainee Programmer)** என அழைக்கப் படுவர். ஒரு நிறுவனத்தில் இவ்வாறான பதவிக்கு இணைபவர் அந்நிறுவனம் நடைமுறையில் வைத்துள்ள செய் நிரலாக்கல் மொழியில் ஓரளவு தேர்ச்சியும் ஏனைய பயன்பாட்டிலுள்ள மொழிகளில் அறிவும் பெற்றிருக்கவேண்டும்.

### செயல்முறையாளர்

பயிற்சிச் செயல்முறையாளராக இருந்தவர் செயல்முறையாளராக பதவி உயர்வு பெறுவார். அல்லது அதற்கெனவுள்ள சில கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்தவர் நேரடியாக செயல் முறையாளராக **(Programmer)** பதவியேற்கலாம்.

### மென்பொருள் பொறியலாளர்

ஒரு நிறுவனத்திற்குத் தேவையான மென்பொருள் ஒன்றைத் தயாரிக்க முன் அது தொடர்பான தகவல்கள் பயன்படுத்தும் வன்பொருட்கள், சூழ்நிலைகள் தேவைகளை ஆராய்ந்து செயல்முறையாளர்களுடன் ஆராய்ந்து திட்டமிட்டுச் செய்நிரல்களை முழுமையாக வடிவமைத்து வழங்குவது மென்பொருள் பொறியியலாளரின் **(Soft ware engineers)** பணியாகும்.

### திட்டத் தலைவர்

ஒரு நிறுவனத்திற்கு எழுதப்படும் செய்நிரல் தொகுப்பைத் திட்டம் அல்லது நிகழ்ச்சித் திட்டம் என அழைப்பர். ஒரு நிறுவனத்தில் மேற்கொள்ளப்படும் - செய்நிரல் எழுதுவதற்குத் தேவையான தகவல்கள் அங்கு மேற்கொள்ளப்படும் நடைமுறைகளைப் புரிந்து கொண்டு மென்பொருள் பொறியியலாளர்களுக்கு விளக்கமளித்துச் சரிவர மென்பொருளை உருவாக்கும் திட்டத்தை முடிப்பது திட்டத் தலைவரது **(Project leader)** பணியாகும். மென்பொருளின் இறுதி வடிவத்துக்கு இவரே பொறுப்பாக இருப்பார்.

### திட்ட மேலாளர்

ஒரு நிறுவனத்தில் நிகழ்ச்சித் திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்கான ஒப்பந்தத்தைப் பெற்று அவ் ஒப்பந்தம் மூலம் மேற்கொள்ள வேண்டிய திட்டத்தை முழுமையாக அலசி ஆராய்ந்து திட்டத் தலைவர், மென்பொருள் பொறியலாளர்களுக்கு உரிய பணிகளை விளக்குவது திட்ட மேலாளரின் **(Project manager)** இன் பணியாகும். பின்னர் தயாரிக்கப்பட்ட திட்டத்தை நிறுவனத்துக்கு அனுப்பி செயல்முறை விளக்கங்கள் பயிற்சிகள் வழங்கி அத் திட்டத்தின் சிக்கலற்ற செயற்பாட்டை உறுதி செய்வதும் இவரது பொறுப்பாகும்.

சி.சிவபாலன்

---

## மோட்டார் சைக்கிள் மோதி வயோதிபர் பரிதாப மரணம்

(மட்டக்களப்பு)

மட்டு. ஏறாவூர் ஆறுமுகத்தான் குடியிருப்புப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தொன்றில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த வயோதிபர் மீது மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்த அவர் ஆபத்தான நிலையில் மட்டு. போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்துடன் தொடர்புடைய மோட்டார் சைக்கிள் உரிமையாளரை பொலிசார் கைதுசெய்ததுடன் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டுள்ளனர்.

## பொலிஸ் அதிகாரிகளுக்கு அரசியல்வாதிகள் அச்சுறுத்தல் விடுப்பதைக் கட்டுப்படுத்துக

### - ரணிலிடம் மகிந்த ராஜபக்ஷ வலியுறுத்து

(கொழும்பு)

பொலிஸ் அதிகாரிகளுக்கு அரசியல்வாதிகள் அச்சுறுத்தல் விடும் நடவடிக்கைகளைக் கட்டுப் படுத்த உடன் நடவடிக்கை எடுக்குமாறு சிறிலங்கா எதிர்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவரும் பொலிஸ் அதிகாரிகளை ஆளுங்கட்சியின் அரசியல்வாதிகள் அச்சுறுத்தும் நடவடிக்கைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும் இக்கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்து அதிகாலை வேளை கொள்ளை!

(வவுனியா)

வீட்டுக் கதவை உடைத்துக் கொண்டு உள்நுழைந்த இனம் தெரியாத இருவர் துப்பாக்கிப் பிரயோகம் செய்து வீட்டாரை அச்சுறுத்தி 35 பவுண் நகைகளைக் கொள்ளையடித்துக் கொண்டு தலைமறைவான சம்பவம் வவுனியா பண்டாரிக்குளம் மாடசாமி கோயில் வீதியில் உள்ள வீடொன்றில் கடந்த சனிக்கிழமை அதிகாலை நடைபெற்றுள்ளது.

இது தொடர்பாக வீட்டு உரிமையாளரான இராமலிங்கம் சதாசிவம் என்பவர் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

அவரது முறைப்பாட்டின் படி; கதவை உடைத்துக் கொண்டு நுழைந்த இருவரும் துப்பாக்கி ஒன்றை வைத்திருந்ததாகவும். மேல் நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்து வீட்டாரை அச்சுறுத்தியே 3 இலட்சம் பெறுமதியான நகைகளை அபகரித்துச் சென்றதாகக் கூறப்பட்டுள்ளது.

## சமாதான முயற்சிகளின் நிலைப்பாட்டை ஜஸ்வந்த் சின்ஹா கொழும்பில் வெளியிடுவார்!

எதிர்வரும் 18ஆம் திகதி இலங்கை வரவுள்ள இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா சமாதான முயற்சி குறித்து இந்தியாவின் நிலைப்பாட்டை வெளியிடவுள்ளதாகத்தெரிவிக்கப்படுகின்றது.

தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தை மீண்டும் ஆரம்பிக்கப்படவேண்டும் என இவர் வலியுறுத்துவார் என ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கை வரவுள்ள இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ ஆகியோரையும் சந்தித்துப் பேசவுள்ளார்.

இந்தச் சந்திப்புக்களின் போதும் சமாதான முயற்சி குறித்த இந்தியாவின் நிலைப்பாட்டினை அவர் எடுத்துக் கூறுவார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வாரம் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்ட சிறிலங்கா பொருளாதார மீள் கட்டமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட ஜஸ்வந்த் சின்ஹாவை சந்தித்து பேசியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தேசிய எழுச்சிப் பேரவை ஊரகக் கிளை திறப்பு

கிளிநொச்சி இரத்தினபுரம் கிராமத்தில் கடந்த சனியன்று ஊரக தேசிய எழுச்சிப் பேரவை தெரிவு கிளி.நகர் வலய அரசியல்துறைப் பொறுப்பாளர் பரந்தாமன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கிளிநொச்சி பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் திருமாறவன், எழுச்சிப்பேரவை செயலாளர் பசுபதிப்பிள்ளை ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

தொடர்ந்து குழுத் தெரிவு இடம்பெற்றது. செயலாளராக மு. சுந்தரமூர்த்தியும், உபசெயலாளராக ந.நாகராசாவும், பொருளாளராக க. தற்சனசிங்கம் மற்றும் 6 நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.



பாப்பரசரின் ஆசிபெற்ற மடு அன்னையின் திருச்சொரூபம் பவனியாக மருதானை மென். மாத்தியா ஆலயத்திலிருந்து புறப்படுகிறது. இச்சொரூபம் வவுனியா-மன்னார் வீதி சந்தியில் அமைக்கப்பட்ட பீடத்தில் வைக்கப்படவுள்ளது.

## தேர்தல் முறை மாற்றத்திற்கான தெரிவுக்குழு அமைக்க பிரேரணை

(கொழும்பு)

தேர்தல் முறையை மாற்றியமைப்பதற்கான பாராளுமன்றத் தெரிவுக்குழுவிற்கு உறுப்பினர்களை நியமிக்கும் பிரேரணை சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்படுமென ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இப்பிரேரணை அடுத்த மூன்று வாரங்களுக்குள் சமர்ப்பிக்கப்படுமெனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

தேர்தல் முறையை மாற்றியமைக்கும் பாராளுமன்ற தெரிவுக் குழுவிற்கு ஆளும் கட்சியிலிருந்து 10 உறுப்பினர்களும், எதிர்க்கட்சியிலிருந்து 09 உறுப்பினர்களும் நியமிக்கப்பட வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவர்களின் பெயர்கள் பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டு அனுமதி கிடைத்த பின்னர் தேர்தல் முறையை மாற்றியமைக்கும் பாராளுமன்ற தெரிவுக்குழு இயங்க ஆரம்பிக்குமென கூறப்படுகிறது.

## கண்டியில் நடமாடிய தமிழ்ச் சிறுவன் தடுப்பு

கண்டி நகரத்தில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய சிறுவன் ஒருவனை கடந்த ஞாயிறன்று இரவு கண்டிப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

இச்சிறுவன் வவுனியா பூந்தோட்டத்தைச் சேர்ந்த பத்மநாதன் சுமன் (12-வயது) எனவும் கொழும்பில் வேலைபார்க்கும் அக்காவைத் தேடி வந்ததாகவும் பொலிசாரிடம் தெரிவித்துள்ளார்.

சிறுவனை பரிசோதனைக்குட்படுத்திய போது சிறுவனின் உடலில் ஷெல் வெடித்ததினால் ஏற்பட்ட காயங்கள் காணப்படுவதால், சிறுவனை கண்டி நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்வதற்கான ஏற்பாடுகளை பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்க முன்பாக மாகாண சபைத் தேர்தல் நடைபெறலாம்!

## - பலப்பரீட்சைக்கு கட்சிகள் தயார்

(கொழும்பு)

**எதிர்வரும் வரவு -செலவுத் திட்டத்துக்கு முன் ஒன்று அல்லது இரண்டு மாகாண சபைகளுக்குத் தேர்தல் நடைபெறும் சாத்தியம் காணப்படுகிறது. அவ்வாறு நடைபெறுமாயின் ஆகஸ்ட் மாத முடிவுக்குள் மேற்படி மாகாண சபைகள் கலைக்கப்பட வேண்டும்.**

சனாதிபதியுள்ளிட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய உறுப்பினர் சிலர் மேற்படி மாகாண சபைத் தேர்தல் மூலம் தமது பலத்தைப் பரீட்சித்துப் பார்க்கும் நோக்கம் ஏற்பட்டுள்ளதால் இந்த நிலை தோன்றியிருக்கின்றது. மேற்படி தேர்தலில் வெற்றி பெற முடியுமாயின் ஆளும் கட்சியைக் குழப்பி அரசியலில் பிரச்சினையை ஏற்படுத்துவது அவர்களின் நம்பிக்கையாகும்.

வடமேல் மாகாணசபைப் பதவிக காலம் 2004 ஜனவரி 25 ஆகவும், மத்திய ஊவா, வட மத்திய சப்ரகமுவ மாகாணங்களின் பதவிக் காலம் 2004 ஏப்ரல் 6 திகதியாகவும் தென் மாகாண சபைப் பதவிக்காலம் 2004 ஜூன் 10 திகதியாகவும் இருக்கின்றன.

இவற்றுள் ஒன்றைத் தவிர ஏனைய அனைத்தும் பொ.ஐ. முன்னணி கட்சி ஆட்சியிலேயே நடைபெறுகின்றன. சிறிலங்கா சுதந்திரக் கட்சி இப்போதிருந்தே வேட்புமனுப் பட்டியல் தயாரிப்பில் ஈடுபட்டு வருகின்றது. வேட்பாளர்களும் மனு தாக்கல் செய்ய ஆயத்த நிலையிலேயே இருக்கின்றனர்.

எனினும் ஐ.தே.க செயலர் செனரத் கப்புகொடுவ தமது கட்சி எந்த வேளையிலும் தேர்தலுக்கு தயாராகவே இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை அமைச்சர் பீரிஸ் சனாதிபதி மூன்று வழிகளில் மாற்றத்தை ஏற்படுத்த முயற்சித்திருப்பதாகக் கூறுகிறார். அதாவது மாகாண சபைத் தேர்தல் மூலம் அல்லது சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாகக் கருத்துக்கணிப்பு நடத்துவதன் மூலம் அல்லது பொதுத் தேர்தல் நடத்துவது மூலம் மாற்றத்தை ஏற்படுத்த விரும்புகிறார் எனவும் இவற்றுள் எதனையும் சந்திக்கத் தமது ஐ.தே.மு அரசு தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

எனினும் பொ.ஐ.முன்னணி ஜே.வி.பியுடன் கூட்டணி அமைப்பதில் 20 க்கு மேற்பட்ட தடவைகள் பேச்சுக்கள் நடைபெற்றிருப்பினும் கூட்டணி சாத்தியப்படாமல் இருக்கிறது. கூட்டணி சாதகமாயின் பொ.ஐ.மு.யின் கீழ் ஜே.வி.பி போட்டியிடலாம்.

இதனிடையே மாகாணசபைத் தேர்தல் நடைபெறுமாயின் அது இரு பிரதான கட்சிகளுக்கும் பெரும் பலப் பரீட்சையாக இருக்கும் என அவதானிகள் கருதுகின்றனர்.

## பாதைகள் அமைப்பு

திருகோணமலை-மட்டக்களப்பு கரையோரப் பாதையான ஏ-15 இல் உள்ள உப்பாறு, கங்கை, மூதூர் ஆகிய துறைகளுக்கு புதிய மிதவை பாதைகள் தயார் படுத்தப்பட்டு வருகின்றன. கடந்த 10 வருடங்களுக்கு மேலாக திறக்கப்படாதுள்ள இவ்வீதி அண்மையில் திறக்கப்பட்ட போதிலும் போக்குவரத்து வசதிகள் இல்லாததால் மக்கள் பயணம் செய்வதில் பல சிக்கல்களை எதிர்நோக்கி வந்தனர்.



கொள்ளையர் குழுவொன்றினால் கொழும்பில் பல இடங்களில் கொள்ளையடிக்கப்பட்ட பொருட்கள் இவை. சந்தேக நபர் ஒருவரும் கிரான்பாஸ் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

# நாட்டைத் தாரை வார்க்க ரணில் முயற்சி; அதிகாரத்தைப் பாவிக்கும் சூழல் உருவாகிறது

## -சிறிலங்கா சனாதிபதி அறிவிப்பு

(கொழும்பு)

ரணில் விக்கிரமசிங்க சமாதான நடவடிக்கை மூலம்



நாட்டை தாரை வார்க்கும் செயலில் ஈடுபட்டுள்ளதாகவும், அதனைத் தடுக்க தமது நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தி நாட்டைக் காக்க பின்னிற்கப்போவதில்லை எனவும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

பொருத்தமான சூழ்நிலை ஏற்படும் பட்சத்தில் தான் இவ்வாறு செய்வதாகவும் அத்தச் சூழல் உருவாகி வருவதாகவும் கடந்த வெள்ளியன்று கொழும்பில் நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சி மாதர் அமைப்பின் பெண்களின் தலைமைத் துவப் பயிற்சிக் கருத்தரங்கில் உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கும் போது; நாம் இன்று பெரும் அச்சுறுத்தலுக்கு மத்தியிலேயே வாழ்கிறோம் 2500 ஆண்டு கால வரலாற்றில் நடைபெறாதஒன்று நாட்டில் நிகழ்கிறது. சமாதானம் என்ற போர்வையில் ரணில் நாட்டை படிப்படியாக புலிகளுக்கு பிரித்துக் கொடுக்க முயல்கிறார். இதனையிட்டு நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியான என்னை மக்கள் என்ன செய்கிறீர்கள் என்று வினவுகின்றனர்.

நிறைவேற்று அதிகாரத்தை கொண்டிருந்தபோதும் காலம் கனிந்து வரும் இந்த வேளையில் தானாக மாற்றங்கள் ஏற்படும். நிறைவேற்று அதிகாரம் தகுந்த சூழலில் பிரயோகிக்கப்படும்.

ஐ.தே.மு மீது மக்களுக்கு ஏற்பட்டுள்ள வெறுப்பு தற்போது அதிகரித்துள்ளது. அக்கட்சியிலுள்ள -நாட்டை பாதுகாக்கும் சிலரும் எமக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இந்த அரசு சமாதானம் என்று கூறிக்கொண்டு கூத்தாடுகிறது. 400-500வரையான ஊடகவியலாளர்களையும் அழைத்துக் கொண்டு உலகைச் சுற்றியதுதான் மிச்சம். இதற்கு எங்கிருந்து பணம் கிடைக்கின்றது. அனைத்தும் மக்களின் சொத்து. 11 உறுப்பினர்களால் தோற்ற ரணில் பன்னிரண்டு உறுப்பினர்களால் வென்றார். எமது கட்சியிலிருந்து பிரிந்து சென்ற துரோகிகளாலேயே இதுநிகழ்ந்தது. இம்முறை தேர்தலில் அது நடக்காது.

21 ஆயிரம் இறந்த படையினரின் குடும்பங்களுக்கும் போரினால் வலது குறைந்த 12 ஆயிரம் படையினருக்கும் நாம் சேவையாற்றுகிறோம் அவர்களின் கனவான நாட்டின் ஐக்கியத்தை கட்டிக் காப்பது எமது ஒவ்வொருவரினதும் கடமையாகும் என்றார்.

# ஆசிரிய இட மாற்ற நடைமுறைகள் அறிவிப்பு

2004 ஆம் ஆண்டிற்கான ஆசிரிய இடமாற்றங்களை நடைமுறைப்படுத்தும் போது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு முறைகள் தொடர்பாக வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

வலயத்துக்குள்ளான இடமாற்றங்களுக்கு அக்டோபர் 15 ஆம் திகதிக்கு முன்னரும், மாவட்டத்திற்குட்பட்ட வலயங்களுக்கிடையிலான இடமாற்றத்திற்கு அக்டோபர் 31 ஆம் திகதிக்கு முன்னரும், மாவட்டங்களுக்கிடையிலான, மாகாணங்களுக்கிடையிலான இடமாற்றத்திற்குச் செப்ரெம்பர் 30 ஆம் திகதிக்கு இடையிலும் விண்ணப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இதேவேளை 53 வயதுக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் விரும்பும் பட்சத்தில் மாத்திரமே இடமாற்றம் வழங்க வேண்டுமென்வும் கஷ்டப் பிரதேசங்களில் 04 வருடங்களைப் பூர்த்தி செய்தவர் இடமாற்றத்திற்குத் தகுதியுடையவர் எனவும் மாகாணக் கல்விப் பணிப்பாளரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வட பகுதி மீனவர் பிரச்சினை கொழும்பில் ஆராயப்படுமாம்

(கொழும்பு)

வடபகுதி மீனவர்கள் சந்திக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான உயர் மட்டக் கூட்டம் கொழும்பில் விரைவில் நடைபெறுமெனச் சிறிலங்காவின இந்துக் கலாசார அமைச்சரும் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடபகுதிக் கடற்பகுதியில் இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடித்தல் மற்றும் வெளிநாட்டு மீனவர்கள் மீன்பிடித்தல் போன்றவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் இந்தக் கூட்டத்தில் ஆராயப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# அரசியல் பழிவாங்கலில் சிக்கிய 12,000 ஊழியர் முறைப்பாடு

அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பாக அரச ஊழியர்களிடமிருந்து சுமார் பன்னிரெண்டு ஆயிரம் முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அரச சேவைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பாகக் கடந்த ஏழு வருடங்களில் இந்த பன்னிரண்டு ஆயிரம் முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளதாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழு தெரிவிக்கின்றது.

இவை குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அரச சேவைகள் ஆணைக்குழு பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த ஆண்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ்.நகரில் 5 நாட்கள் நாட்டுக் கூத்து விழா

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்ற ஏற்பாட்டில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 10 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதிவரை 5 நாட்களுக்கு நாட்டுக் கூத்துவிழா யாழ்நகரில் நடை பெறவுள்ளது.

வருடந்தோறும் திருமறைக் கலாமன்றத்தால் நடத்தப்பட்டு வரும் தமிழ் விழாவே இம்முறை நாட்டுக் கூத்து விழாவாக நடைபெறவுள்ளது.

5 நாட்களும் காலையில் கருத்தரங்கும், மாலையில் கலைநிகழ்வாக நடைபெறவுள்ள இவ்விழாவில் மட்டக்களப்பு,மன்னார், மலையகம், வன்னி, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசக் கூத்து மரபுகள் அந்தந்தப் பிரதேசக் கலைஞர்களைக் கொண்டு அரங்கேற்றப்படவுள்ளதுடன் அவை தொடர்பான ஆய்வரங்குகள் மீட்சார்ந்த முயற்சிகள் எனப் பல்வேறு வகையான செயற்பாடுகளும் இடம்பெறவுள்ளன.

இவை ஒரு தேசிய அரங்கை நோக்கிய தேடலை ஏற்படுத்தும் நோக்கோடு நடத்தப்படவுள்ளன.

இதேவேளை, இந்த நாட்டுக் கூத்து விழாவை முன்னிட்டுத் தென்கோடி நாட்டுக் கூத்துப் போட்டி ஒன்றும் நடத்தப்படவுள்ளது.

# வருடாந்த உற்சவம் ஆரம்பம்

(கிளிநொச்சி)

வட்டக்கச்சி அருள்மிகு ஸ்ரீரங்கநாதப் பெருமாள் கோவில் வருடாந்த உற்சவம் இன்று காலை 11.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும் இவ் உற்சவத்தில் 19 ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும், 20 ஆம் திகதி புதன் கிழமை தேர்த்திருவிழாவும் 21 ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது.

பகல் திருவிழா காலை 8.00 மணிக்கும், மாலைத் திருவிழா மாலை 5.00 மணிக்கும் ஆரம்பமாகும் என ஆலய பரிபாலனசபையினர் அறியத்தருகின்றனர்.

# இலங்கையருக்கு அதிக வேலைவாய்ப்பு அளிக்கும் நாடுகளுடன் அரசு உடன்பாடு

இலங்கையர்களுக்கு அதிக வேலை வாய்ப்புக்களை வழங்கும் நாடுகளுடனான புரிந்துணர்வு உடன்பாடு ஒன்றை சிறிலங்கா அரசு இவ்வாண்டு மேற்கொள்ள இருக்கின்றது.

முதலில் இத்தகைய உடன்பாடு மலேசியாவுடன் மேற்கொள்ளப்படும் என அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

மலேசியாவை அடுத்து ஜோர்தானுடனான உடன்பாடு மேற்கொள்ளப்பட இருக்கின்றது.

இத்தகைய உடன்பாடுகள் வெளிநாடுகளில் பணியாற்றும் இலங்கைத் தொழிலாளர்களுக்குப் பயன்தரும் என்பதாக அமையும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது வெளிநாடுகளில் பணியாற்றும் இலங்கையர்களில் பெண்களின் எண்ணிக்கையே அதிகமாக இருக்கின்றது.



### சிந்தனைக்கு

பிரிவினைவாதம் என்பது தவறான சித்தாந்தம்.இதனைஎங்கள் போராட்டத்திற்குப் பிரயோகிக்க முடியாது. எங்கள் இனத்தின் தேசிய சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில், தேசிய விடுதலைக்காக நாங்கள் போராடிவருகிறோம்.

தமிழீழத்தேசியத் தலைவர்

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 12-08-2003

## போரிடுவது யார்?

ஜே.வி.பி. இயக்கம் இடைக்கால நிர்வாகசபைக்கெதிரான தனது போராட்டத்தை ஆரம்பித்துள்ளது. இதன்பிரகாரம் விடுதலைப்புலிகளுடன் அரசாங்கம் நடத்தும் யுத்தத்திற்கு ஜே.வி.பி. தனது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளது. இதன் அர்த்தமானது. விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகள் நிறுத்தப்பட்டு யுத்தம் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதே ஆகும்.

இதேவேளை, சனாதிபதி சந்திரிகாவும் இடைக்கால நிர்வாகம் பற்றிக் காரசாரமான தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளார். "இலங்கைவரலாற்றில் மிகவும் அபாயகரமான காலத்தை அது எதிர்நோக்கி வருகின்றது. நாட்டின் ஆட்சியாளர் ஒருவர், நாட்டின் ஒரு பகுதியை மற்றொருவருக்குக் கையளிக்கத் தயாராவது இதுவே முதற் தடவை" எனச் சாடியுள்ளார்.

ஜே.வி.பி.யினதும் சனாதிபதியினதும் குற்றச்சாட்டுக்கள் அரசாங்கத்தின் மீதாயினும், சமாதான முயற்சிகளுக்கும், இடைக்கால நிர்வாக சபைக்கும் எதிரானதே. இதில் இரு தரப்பிற்கும் இடையிலான வேறுபாடு, ஒரு தரப்பு– அதாவது பொ.ஐ. முன்னணி (சனாதிபதி சந்திரிகா) சமாதான முயற்சிகளை ஆதரிப்பதாகக் கூறிக்கொண்டு இவற்றை எதிர்ப்பது, ஜே.வி.பி. சமாதான முயற்சிகளை ஆரம்பம் முதலே எதிர்ப்பது என்பது மட்டுமே.

ஆனால், இவ்வாறாக எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பிற்கும் மத்தியில் அரசாங்கம் புலிகளுடன் பேச்சுக்களை நடத்த வேண்டிய நிர்ப்பந்தத்திலேயே உள்ளது. ஒரு புறத்தில் சர்வதேச நாடுகள், நிதி அமைப்புக்களிடம் இருந்து நிதி உதவிகள் இடைக்கப்பெற வேண்டுமாயின் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டிய கட்டாயம் அரசாங்கத்திற்கு உள்ளது.

இக்காரணத்தைத்தவிர்ப்பினும்கூட எதிர்க்கட்சிகளின் விருப்பிற்கு / வற்புறுத்தலுக்கு ஏற்ப அரசாங்கம் யுத்தம் செய்வதற்கு முடியுமா என்பதும் கேள்விக்குரியதே. அதாவது நிதி நெருக்கடியை ஒரு புறம் ஓரம் தள்ளிவிட்டு நோக்கினும் அரசாங்கத்தால் இது சாத்தியமாகுமா என்பதே ஆகும். ஏனெனில் சிறிலங்கா இராணுவம் போரிடும் மனோநிலையில் உள்ளதா என்பது குறித்துப் பலமான சந்தேகங்கள் உண்டு.

சிறிலங்காப் படைத்தரப்பில் இருந்து இன்னமும் தப்பி ஓடுவோர் எண்ணிக்கை குறைந்ததாக இல்லை. மாறாக, யுத்த காலத்தினை விடத் தப்பி ஓடுவோர் தொகை அதிகரித்துள்ளதாகவே இராணுவவட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. குறிப்பாகப் புரிந்துணர்வு உடன்பாடு கைச்சாத்தாகிய பின்னர் சுமார் 10,000 பேர் வரையில் இராணுவத்தை விட்டுத் தப்பி ஓடியுள்ளதாகத் தகவல்கள் கூறுகின்றன.

இது, யுத்தம் செய்வதற்கோ அன்றி இராணுவத்தில் இணைந்து செயற்படுவதற்கோ சிங்கள இளைஞர்கள் தயாராக இல்லை என்பதே அதன் வெளிப்பாடாகும். யுத்த காலத்தில் தப்பி ஓடுவதற்கு விருப்பம் கொண்டிருப்பினும், சாத்தியமான சூழ்நிலை காணப்படாத நிலையில்– சமாதானம் ஏற்பட்டுள்ள நிலையிலும் அவர்கள் தொடர்ந்தும் தப்பி ஓடியே வருகின்றனர்.

இவ்வாறு தப்பிஓடுவதற்கு மனோவியல் ரீதியாக யுத்தம் ஒன்றை எதிர்கொள்வதற்கு அவர்கள் தயாராக இல்லை என்பதே காரணமாகும். அந்த அளவிற்கு அவர்கள் யுத்தத்தில் சலிப்புற்றவர்களாகவுள்ளனர். அத்தோடு, யுத்த நிறுத்தம் – சமாதானப் பேச்சுவார்த்தைகள் என்பன பற்றி அரசாங்கத் தரப்பால் பிரஸ்தாபிக்கப்படினும், அவர்கள் சமாதானம் ஏற்படும் என்பதில் நம்பிக்கை இழந்தவர்களாக, அவநம்பிக்கை கொண்டவர்களாகவும் இருக்கலாம்.

அண்மையில் சிறிலங்கா இராணுவத்தின் போரிடும் தரத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனை வழங்குவதற்காக அழைக்கப்பட்டிருந்த பிரிட்டிஷ் உயர் இராணுவ அதிகாரி ஒருவர் கூட சிறிலங்கா இராணுவத்தினரின் மனோநிலையை அடிப்படையாகக் கொண்டே அது போரிடும் ஆற்றலை இழந்து விட்டது எனவும், வெளிநாடுகளில் சமாதானப் பணிபுரியும் நிலையில் மட்டுமே அது உள்ளது எனவும் சிபார்சு செய்ய முன்வந்திருக்கலாம்.

ஆனால், நிலைமை இவ்வாறு இருக்கையில் எதிர்க்கட்சியினரோ சமாதானப் பேச்சுவார்த்தைகளை முறித்துவிடுவதற்கு வரிந்து கட்டிக் கொண்டு நிற்கின்றனர். இத்தனைக்கும் சனாதிபதி சந்திரிகாவோ தனது பிள்ளைகளின் புகைப்படங்கள் பத்திரிகைகளில் பிரசுரமாவது அவர்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் என்கிறார். கடந்த தேர்தலின் போது, 50,000 ஜே.வி.பி. உறுப்பினர்களை இராணுவத்தில் சேர்ப்பதற்குத் தயார் எனக் கூச்சலிட்டு விட்டு ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச அமரசிங்க தனது பிள்ளை குட்டிகளுடன் லண்டனில் சுகமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார். இந்நிலையில் யுத்தம் புரிவது யார்? சிங்கள ஏழை விவசாயிகளையும் எத்தனை காலத்திற்குத்தான் ஏமாற்ற முடியும்?

# கூட்டணியிலிருந்து பிரிந்து செல்வதில் பொ.ஐ.முன்னணி கட்சிகள் நாட்டம்!

## இனிவரும் தேர்தல்களுக்கான ஏற்பாடு

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல்களில் கூட்டாகப் போட்டியிடுவதா அல்லது தனித்தனியாகப் போட்டியிடுவதா என்பது குறித்து பொதுசன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் முடிவெதையும் எடுக்க முடியாது திண்டாடி வருகின்றன.

பொதுவான நல்லிணக்கத்தின் சக்திகள் அடிப்படையில் மாகாணசபை உள்ளூராட்சி சபைத் தேர்தலிகளில் கூட்டணியில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளும் தனித்தனியாகப் போட்டியிடுவது ஏற்புடையது என ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுவரும் போதிலும், அது சாத்தியப்படுமா என்ற கேள்வியே பலமாக எழுகின்றது. பொ.ஐ.முன்னணிக்குள் இருக்கும் பிரதான கட்சியான சுதந்திரக் கட்சி ஜே.வி.பி.யினருடன் கைகோர்க்க முற்பட்டு நிற்கின்றமை பொ.ஐ. முன்னணிக்குள் இருக்கின்ற ஏனைய கட்சிகளை அதிருப்தியடையச் செய்துள்ளது.

கூட்டணி அமைக்கப்படுவது இழுபறியில் நிற்கின்ற போதிலும் பொ.ஐ.முன்னணிக்குள் இருக்கின்ற இதர கட்சிகள் பிரிந்து செல்வதையே பெரிதும் விரும்புவதாகத் தகவல்கள் வெளியாகிவருகின்றன.

அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியும் அதனோடு இணைந்த கட்சிகளும் மாகாணசபைத் தேர்தல்கள் சம்பந்தமான பேச்சுவார்த்தைகளை நம்பியிருப்பதாகத் தெரியவருகிறது.

# போரினால் பாதிக்கப்பட்ட படையினரைக் கௌரவிக்க 'ரணவிரு சாகித்திய விழா'

## சனாதிபதி சந்திரிகா பணிப்பு

(கொழும்பு)

போரினால் பாதிக்கப்பட்ட படையினரைக் கௌரவிக்கும் முகமாக 'ரணவிரு சாகித்திய விழா'' நாடு பூராவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அதன் தலைவர் மேஜர் ஜெனரல் நீல் டயஸ் தெரிவித் துள்ளார்.

சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஏற்பாட்டில் நாடு பூராவும் இந்த விழாவைக் கொண்டாடுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக கடந்த புதன் கிழமை சனாதிபதி செயலகத்தில் இடம் பெற்ற செய்தியாளர் மாநாட்டில் மேஜர் ஜெனரல் நீல் டயஸ் தெரிவித்துள்ளார்.கதை, கட்டுரை, பாட்டு, கவிதைப் போட்டிகளும், புகைப்படக் கண்காட்சி, சேமநல மற்றும் புலமைப் பரிசில் வழங்குதல் போன்ற நிகழ்ச்சிகளும் இவ்விழாவில் நடைபெறவுள்ளன.

# சிறிலங்கா-சீனாவுக்கு இடையில் ஐந்து உடன்பாடுகள் எட்டப்படும்

சீனாவுடன் சிறிலங்கா ஐந்து உடன்பாடுகளில் கைச்சாத்திடவுள்ளது.சீனாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சீனப் பிரதமருடன் இவ் உடன்பாடுகளில் கைச்சாத்திட அங்கீகாரம் வழங்கவுள்ளார்.இவ்வுடன்பாடுகளில் இரட்டை வரி விதிப்பு நீக்கப்படவுள்ளது. அத்தோடு தொழில்நுட்ப நலன்களைப் பெற்றுக்கொள்ளல், இலங்கைக்கான அனுசரணை அடிப்படையிலான நிதியை வழங்குதல் ஆகியனவும் இடம்பெறுகின்றன.

இரண்டு உடன்பாடுகள் கொழும்பிலும் சாங்காயிலும் உள்ள இரு நாடுகளினதும் வெளியுறவு அமைச்சுக்களின் ஒத்துழைப்பை மேம்படுத்தத்தக்க விவகாரங்களைக்கையாளும்.

# தரவரிசையில் ஹிம் கிளிஸ்டர்ஸ் முதலிடம் பட்டத்தையும் வென்று சாதனை



அமெரிக்காவில் நடைபெற்ற லொஸ் ஏஞ்சல் பகிரங்க டென்னிஸ் போட்டியில் மகளிர் சம்பியன் பட்டம் வென்ற பெல்ஜியத்தின் வீராங்கனை ஹிம்கிளிஸ்டர்ஸ் மகளிர் டென்னிஸ் தரவரிசைப் பட்டியலில் முதலிடத்தைப் பெற்று புதிய சாதனை படைத்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற மகளிர் இறுதிப்போட்டியில் பெல்ஜியத்தின் ஹிம் கிளிஸ்டர்ஸ் அமெரிக்காவின் டெவன்போர்ட்டை 6:1,3:6,6:1 எனும் செற்கணக்கில் தோற்கடித்து சம்பியன்பட்டத்தை கைப்பற்றியுள்ளார்.

இதன் மூலம் மகளிர் தரவரிசைப் பட்டியலில் முதல் இடத்தைப் பிடித்துள்ளார். அமெரிக்க ஓப்பன் டென்னிஸ் விம்பிள்டன் போன்ற கிராண்ஸ்லாம் போட்டிகளில் ஒரு முறை கூட சம்பியன் பட்டம் வெல்லாத ஒருவர், தரவரிசைப்பட்டியலில் முதலிடத்தைப் பிடித்திருப்பது இதுவே முதல் தடவை ஆகும்.

# கிரிக்கெட் சபைக்கே கட்டுப்படுவேன்

## ஷேன் வோர்ன் அறிவிப்பு

என் சம்பந்தப்பட்ட விடயங்களில் அவுஸ்திரேலிய ஊக்கமருந்து தடுப்புப் பிரிவு தலையிடுவதற்கு எந்த அதிகாரமும் இல்லை என அவுஸ்திரேலிய அணியின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் தெரிவித்துள்ளார்.

நான் அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபையின் ஊழியன். என் சம்பந்தப்பட்ட விடயங்களில் அவர்கள்தான் தலையிட வேண்டும்.

அவுஸ்திரேலிய ஊக்கமருந்து தடுப்புப் பிரிவிற்கு இதில் தலையிட எந்த அதிகாரமும் இல்லை. அவர்கள் கொடுத்த தீர்ப்பை நான் ஏற்றுக்கொண்டுதான் ஒரு ஆண்டு தண்டனையை அனுபவித்து வருகிறேன். எனவே அவர்கள் அத்தோடு நிறுத்திக்கொள்ளட்டும் என்றார்.

## டென்னிஸ் போட்டிகளில்

# எதிரணிவீரர்களை வீழ்த்த மயக்க மருந்தளித்த தந்தை!

டென்னிஸ் போட்டிகளில் தனது மகன் வெற்றிபெறுவதற்காக எதிரணி வீரர்களுக்கு மயக்கமருந்தைக் கொடுத்த தந்தை பரிசில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிறிஸ்தோப் பாவியேவு (வயது-43) ஓய்வுபெற்ற ராணுவ வீரர். தென்மேற்குப் பிரான்சை சேர்ந்தவர். இவரது 16 வயது மகன் மார்ச்சிப் இவர் ஆர்வமுடன் டென்னிஸ் ஆடி வருபவர்.

ஜூன் 28 ஆம் திகதி உள்ளூரில் நடைபெற்ற டென்னிஸ் அரை இறுதியின் போது தனது மகனுக்கு எதிராக ஆடிய வீரரின் குடிநீர் போத்தலின் சீலை பாவியேவு உடைத்தாராம். இதனைக் கண்ட இன்னுமொரு வீரர் பொலிஸாரிடம் அறிவிக்க அதனைப் பரிசோதனை செய்த பொலிசார் போத்தலில் மயக்கத்தை ஏற்படுத்தும் டெமஸ்டா மருந்து கலந்திருப்பதைக் கண்டுபிடித்தனர்.

## விக்டர்போலன் வென்றார்

காத்மண்டில் நடைபெற்ற சதுரங்கப் போட்டிகளில் மால்டோவைச் சேர்ந்த விக்டர் போலன் 6 1/2 புள்ளிகள் பெற்று சம்பியன் பட்டத்தை வென்றுள்ளார். இந்தியாவின் கிராண் மாஸ்டர் விஸ்வநாதன் ஆனந்தும் ரஷ்யாவின் பிளாரிமன் கிராமினிக்கும் தலா 4 1/2 புள்ளிகள் பெற்று இரண்டாம் இடத்தைப் பகிர்ந்துகொண்டுள்ளனர்.



# கிளி. கல்வி வலய பாடசாலைகளின் க.பொ.த. உ/த சிறந்த பெறுபேறுகள்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கல்வி வலயப் பாடசாலைகளின் க.பொ.த. (உ/த) பரீட்சைப் பெறுபேறுகளில் சிறந்த பெறுபேறுகள் வருமாறு:

***கிளிநொச்சி இந்துக் கல்லூரி***

மருத்துவம்:
ச. திவாகர் ஏ,2பி, மாவட்ட நிலை 01

பொறியியல்:
இ. சஞ்சயன் 2சி, எஸ்,

கலைப் பிரிவு :
ஜே. பிரகாஸ் 2பி, சி,

வர்த்தகம் :
க. சிவதர்சினி ஏ, 2 பி, ந. கிருஸ்ணராசா 3பி, நநிஷாந்தன் ஏ,பி,சி, சு. சிவசூரியா 2ஏ,பி.

***கிளி. மத்திய கல்லூரி***

மருத்துவம் :
கா. நிர்மலன் ஏ,2பி, மாவட்ட நிலை 02, க. பிரசாந்தி 3 பி, மாவட்ட நிலை 03, சி. இதயரூபன் ஏ,பி,சி, மாவட்ட நிலை 04, சி. தேவிகா 2பி, சி, மாவட்ட நிலை 05, கோ.பிரகாஸ் ஏ,2பி, மாவட்ட நிலை 06, சி. மதிவதனன ஏ,2பி, மாவட்ட நிலை 07, இ. இளங்கோ ஏ, 2பி, மாவட்ட நிலை 08, நி. பிரசாந்தன் ஏ, 2பி, மாவட்ட நிலை 10, ந. திலீபன் 3சி, க. தனோபிக்கா 3சி, செ. கிருசாந்தன் 2சி, எஸ்,

பொறியியல் :
ஜே. பிரான்சிஸ் 3சி, மாவட்ட நிலை 07, செ. நிமலன் 3சி, மாவட்ட நிலை 10, க. இராகுலன் 2சி, எஸ், க. தட்சனாகினி 2சி, எஸ்.

வர்த்தகம் :
செ. சுகந்தினி ஏ.2பி.

கலைப் பிரிவு :
ம. வினோதா 3பி.

***கிளிநொச்சி மகாவித்தியாலயம***

வர்த்தகம் :
ஆ. சசிவதனா 3ஏ, மாவட்ட நிலை 04.

***அக்கராயன் மகாவித்தியாலயம்***

வர்த்தகம் :
பா. நிரஞ்சன் 3ஏ, மாவட்ட நிலை 01, பா. நிரோசன் 3ஏ, மாவட்ட நிலை 03, தி. தர்சினி 2ஏ,சி, மாவட்ட நிலை 04, பா. சுகந்தி 2ஏ,பி, மாவட்ட நிலை 06, சோ. சுமணா 3பி,

கலைப்பிரிவு :
சி. நடராசா 2ஏ.பி. மாவட்ட நிலை 02, மு. வசந்தன் 3பி, மாவட்ட நிலை 06, க. சாவித்திரி 3.பி, மாவட்ட நிலை 07.

***முரசுமோட்டை முருகானந்தா மகாவித்தியாலயம்***

பொறியியல் :
செ. ராம்ராஜ் ஏ,2பி, மாவட்ட நிலை 01, ம. அஜந்தினி 2பி,சி, மாவட்ட நிலை 02, சோ. ஆதவன் 2பி,சி, மாவட்ட நிலை 03, ம. சசிவர்ணன் ஏ,2சி, மாவட்ட நிலை 04, பா. வரதரூபன் 2பி,சி, மாவட்ட நிலை 05.

கலைப்பிரிவு :
இ.ரமேஸ்கரன் ஏ,2பி, மாவட்ட நிலை 05, க. துஷ்யந்தன் ஏ,பி,சி, மாவட்ட நிலை 09,

***பளை மத்திய கல்லூரி***

பொறியியல் :
சு.சஞ்சீவன் 3சி,ப. தர்சிகா சி,2எஸ்,

மருத்துவம் :
ஜெ. காண்டீபன் 3சி, க. கண்ணதாசன் 3சி,

***புனித திரேசா மகளிர் கல்லூரி***

மருத்துவம் :
ப. ரெசாஸ்ராணி 3சி, த. ஜெயமாலா 2சி,எஸ்,

***வட்டக்கச்சி மகாவித்தியாலயம்***

மருத்துவம் :
பு. தர்மிசன் 3சி.

வர்த்தகம் :
பா. ஜெயந்தரூபன் ஏ,2பி, இ.அபராஜிதன் 2ஏ,சி,

***பூநகரி மகா வித்தியாலயம***

வர்த்தகம் :
க. கஜேந்திரவேல் 3ஏ, மாவட்ட நிலை 02, ச. சிவனருட்செல்வி 2ஏ,பி, த. இசைப்பிரியா ஏ. 2பி,

கலைப்பிரிவு :
ச. கேசவன் 2பி,சி, வி. வசந்தன் ஏ,2சி,

***பூநகரி நல்லூர் ம. வி.***

கலைப்பிரிவு :
கு. புஸ்பா 3பி, பொ. நித்தியமதி 2பி,சி, , த. துஷ்யந்தன் 2பி,சி,

***கண்டாவளை ம. வி.***

கலைப்பிரிவு :
ஐ. ஜெகதீஸ்வரி 2பி,சி.

***முறுங்காவில் ம. வி.***

வர்த்தகம் :
சி. ரமேஸ் 2ஏ,பி,

***கனகபுரம் ம. வி.***

வர்த்தகம் :
கோ. அரசகேசரி ஏ,2பி, மாவட்ட நிலை 09.

கலைப்பிரிவு :
அ. குணாதிகா ஏ,2பி, மாவட்ட நிலை 10.

***தர்மபுரம் ம. வி.***

கலைப்பிரிவு :
கி.லட்சுமிகுமாரி 3பி, பெ. மீனா ஏ,2சி.

***இராமநாதபுரம் ம. வி.***

வர்த்தகம் :
ம. ரஜீவம் 3பி.

***உருத்திரபுரம் ம. வி.***

கலைப்பிரிவு :
து. ரதீபன் ஏ,பி,சி.

***வேரவில் இந்து ம. வி.***

கலைப்பிரிவு :
கு.அங்கையற்கண்ணி ஏ,2சி,

***பிரமந்தனாறு ம. வி.***

கலைப்பிரிவு :
த. ஜினோதினி ஏ,பி,சி.

(சோ)

# சமாதானத்தை மையமாகக் கொண்டு பொருளாதாரக் கொள்கை வகுக்கப்படும்

## சிறிலங்காப் பிரதமர் சீனாவில் உரை

(கொழும்பு)

இலங்கை சமாதானத்தின் உதயத்தை மையமாகக்கொண்டு பொருளாதாரக்கொள்கை ஒன்றை வகுப்பதற்கு கவனம் செலுத்துவதாகப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

கடந்த 20 மாதங்களாக யுத்த நிறுத்த உடன்படிக்கை திருப்திகரமாகக் கடைப்படிக்கப்பட்டு வருகிறது புதிய உத்வேகத்துடன் சமாதான முயற்சி மீண்டும் ஆரம்பிக்கப்படுவதற்கான சிறந்த சமிக்கைகள் தெரிவதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

நான்கு நாள் உத்தியோக விஜயத்தில் சீனா சென்றிருக்கும் பிரதமர், பீஜிங்வர்த்தக சபைக் கூட்டத்தில் உரையாற்றினார்.

பரஸ்பர பொருளாதர உறவுகள் பிராந்தியப் பொருளாதார விவகாரங்கள் குறித்ததில் பிரதமர் பல கருத்துக்களை அங்கு வெளியிட்டார். இலங்கைக்கும் சீனாவுக்குமிடையிலான இறப்பர் -அரிசி உடன்படிக்கை முக்கியமான ஒன்று என்றும் புதிய பொருளாதார உடன்பாடுகளை ஏற்படுத்துவதில் வர்த்தக உடன்பாடும், சேவைகள் பரிவர்த்தனையும் முக்கியமான ஒன்றாகும் என்றும் தெரிவித்தார்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே கட்டப்படும் பாலம் நாட்டின் துறைமுகங்களை மேலும் விரிவுபடுத்தும் என்றும் இலங்கையின் விமான நிலையங்களும் புனரமைக்கப்படஉள்ளதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சீனாவிற்கு உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்று சீனப் பிரதமரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை தென்கிழக்குசீன நகரைச் சென்றடைந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு அங்கு உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

14வருடங்களின் பின்னர் சிறிலங்காப் பிரதமர் ஒருவர் சீனாவிற்கு தற்போது விஜயம் செய்துள்ளார்.

# உயர் பாதுகாப்பு வலயத்தினால் தீவக பாடசாலை மாணவர்கள் பாதிப்பு

## வைத்தியசாலைகளிலும் வைத்தியர் இல்லை

யாழ். தீவகப் பகுதியில் உள்ள பல பாடசாலைகளில் இராணுவத்தினர் முகாமிட்டிருப்பதால் இன்னமும் இயங்க முடியாதுள்ளதால் தீவகப் பகுதி மாணவர்களது கல்வி மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

யுத்தநிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு சமாதானம் நிலவும் இக்கால வேளையிலும் இராணுவத்தினர் இப்பகுதியிலுள்ள பாடசாலைகளில் தொடர்ந்தும் முகாமிட்டுக் குடியிருந்து வருகின்றனர். இத்தகைய சில பாடசாலைகள் பாதுகாப்பு வலையத்தினுள்ளும், சில பாடசாலைகள் பாதுகாப்பு வலயத்துக்கு அண்மித்த பகுதிகளிலும் இருப்பதால் இப்பகுதி மாணவர்களினது கல்விநிலை மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் உளரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களாகத் தொடர்ந்தும் கல்வியில் வெறுப்புடையவர்களாகக் காணப்படுகின்றனர்.

இதேவேளை தீவகப் பகுதிகளான வேலணை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு போன்ற அரசினர் வைத்தியசாலைகள் தகுதிவாய்ந்த வைத்தியர்கள் இல்லாது சில தாதிமாரின் உதவியுடன் இயங்கி வருகின்றது. அவசர சேவையின் பொருட்டு நோயாளர்களை எடுத்துச் செல்வதற்கு அம்புலன்ஸ் வண்டிகள் எதுவும் இந்த வைத்தியசாலைகளுக்கு வழங்கப்படவில்லை.

இத்துடன் சிறிலங்கா அரசினது போக்குவரத்துப் பயணிகள் ஊர்தியும் இப்பகுதிக்கு உரிய நேரத்தில் வருவதில்லை என்றும் இப்பகுதிகளுக்கான மின்சாரம் அடிக்கடி தடைப்படுவதாகவும் இப்பகுதி மக்கள் மிகவும் கவலையுடன் தெரிவித்துள்ளனர். (33)

### அளம்பில்...

மீன்கள்கூட ஒளியை நோக்கி வந்து வலைக்குள் அகப்படும். இச்சுருக்கு வலை முறையால் மீன்பிடித்தலுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சிங்கள மீனவர்களின் இந்த அத்துமீறும் நடவடிக்கைகளினால் அளம்பில், செம்மலை, நாயாறு மீனவர் 'கள் தொழிலில் நஷ்டமடைய நேருகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

### அமைச்சர்...

ஒருபோதும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. அரசு புலிகளுக் கிடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் எமக்கு ஒரு நிம்மதியானதும், நிரந்தரமானதுமான வாழ்வு ஏற்படும் என்று நம்பியிருந்தோம். ஆனால், ஒப்பந்தத்தின் பின்பும் அகதி வாழ்வும் அரச படைகளின் நெருக்கு வாரங்களும் தொடர்ந்த வண்ணம் இருக்கின்றது என்றும், போர் காரணமாக இடம்பெயர்ந்து 15 வருடங்களாகியும் வலி. வடக்கு மக்கள் சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாமல் மிகவும் அவதிப்படுகின்றார்கள் என்றும், எமது இயல்பு வாழ்விற்குத் தடையாகவுள்ள உயர்பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்பட வேண்டும் என்றும் இந்த மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.(33)

### அபகரிக்கப்பட்ட...

கப்பட்டுள்ளதுடன் இவ்வீட்டுக் காணிகளில் காணப்பட்ட மா, பலா போன்ற பயன்தரு மரங்கள் அழிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, இப்பொலிஸ் நிலையத்தைச் சூழவுள்ள 20 ஏக்கருக்கு மேற்பட்ட விளை நிலங்கள் பொலிசாரின் விளையாட்டுத் திடலாகவும் மாற்றப்பட்டுள்ளது.

இந்த நிலையைச் சுட்டிக்காட்டி பல அரச, அரச சார்பற்ற அமைப்புகளுக்கு அறிவித்திருந்த போதும் எந்தவிதமான பலனும் கிடைக்கவில்லை என்றும் பாதிக்கப்பட்ட மக்கள் கவலையடைகின்றார்கள். (33)

# இந். உலங்குவானூர்தி அரபிக் கடலில் வீழ்ந்தது

## 4 விமானிகள் உட்பட 25 பேர் பலி

(புதுடில்லி)

மும்பாய் - அரபிக்கடற்கரையில் இந்திய உலங்குவானூர்தி ஒன்று நேற்று விபத்திற்குள்ளாகியதில் அதில் பயணம் செய்த 25 பேர் பலியாகியுள்ளனர்.

எண்ணெய் மற்றும் இயற்கை வாயுக்கழகத்திற்குச் சொந்தமான உலங்குவானூர்தி கடலில் வீழ்ந்து மூழ்கியுள்ளது. இதில் பயணித்த எண்ணெய் மற்றும் இயற்கை வாயுக்கழகத்தைச் சேர்ந்த 21 பேரும் விமானிகள் நால்வரும் பலியாகியுள்ளனர்.

# புலனாய்வுத்துறையின் ஜீப்வண்டி விபத்தில் சிக்கியது

## இரு பொலிசார் பலி

(கொழும்பு)

இரத்தினபுரி பொலிஸ் நியத்தைச்சேர்ந்த விசேடபுலனாய்வுப்பிரிவின் ஜீப்வண்டி ஒன்று உடகம்பற பகுதியில் விபத்திற்குள்ளானதில் இரு பொலிசார் பலியாகியுள்ளனர்.மேலும் ஒன்பது பொலிசார் காயமடைந்து கம்பஹா மற்றும் கொழும்பு தேசிய வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.இந்த விபத்து கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. இந்த ஜீப்வண்டியில் சென்ற பொலிசார் உடகம்பற விடுதி ஒன்றில் உணவு உட்கொண்டுவிட்டு சர்ச்சையில் ஈடுபட்டுவிட்டுச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# யாழ்.மாவட்ட தே.எ.பேரவையின் நிர்வாகிகள் தெரிவு

(அலுவலக செய்தியாளர்)

தேசிய எழுச்சிப் பேரவையின் யாழ்ப்பாண மாவட்ட தெரிவுக் கூட்டம் கடந்த 05.08.2003 காலை 11.00 மணியளவில் யாழ.நாவலர் கலாச்சார மண்டபத்தில் யாழ்பாண மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் .சி. இளம்பரிதி தலைமையில் நடைபெற்றுள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தின் யாழ். நல்லூர் கோட்டம், தீவகக் கோட்டம், வலிகாமக் கோட்டம், வடமராட்சிக் கோட்டம்,தென்மராட்சிக் கோட்டம் போன்ற பகுதிகளிலிருந்து 150க்கு மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

மாவட்ட செயலாளராக சொலமன் சூ.சிறில், துணைச்செயலாளராக க.சந் திரசேகரம், பொருளாளராக த.முகுந் தன் ஆகியோரும், பிரதேசத்துறைசார் பிரதிநிதிகளாக 25 நிர்வாக உறுப்பினர்களும் தெரிவானார்கள். (சோ)

# இலங்கைக்கான சேவையை பி.பி.சி. விரிவுபடுத்த முடிவு

(கொழும்பு)

பி.பி.சி உலக சேவை இலங்கைக்கான ஆங்கில வானொலி சேவையை எவ்.எம். அலைவரிசை ஊடாக விரிவு படுத்தவுள்ளதாக அதன் ஆசிய பசுபிக் பிராந்தியத்துக்கான தலைவர் லாண்ட்றிச் தெரிவித்துள்ளார்.

இவ் அலைவரிசையை ஆரம்பிப்பதற்கு உள்ளூர் கம்பனிகளுடனும், அரச அதிகாரிகளுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளதாகவும் அறிவித்துள்ளார்.

# கிளி. வைத்தியசாலையில் உளவளத்துறைப் பிரிவு ஆரம்பம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கட்டம் இரண்டு மருத்துவமனை வளாகத்தில் உளவளத்துறைப் பிரிவு ஒன்று நேற்று மாலை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மருத்துவ அதிகாரி கலாநிதி ச. விக்னேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பொதுச் சுடரினை கிளிநொச்சி பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் சத்தியமூர்த்தி மற்றும் கியுடெக் திட்ட இணைப்பாளர் அருட்தந்தை றோயின் ஆகியோர் ஏற்றிவைக்க கட்டடத்தை யுனிசெவ் நிறுவனத்தின் பிரதிநிதி பெனிபுறாம் நாடாவை வெட்டித் திறந்து வைத் தார்.

இந்த நிகழ்வில் பெனிபுறாம் உரையாற்றும்போது, போர்ச் சூழலில் மட்டுமல்லாது இயல்பான சூழலிலும் உளவளத்துறையின் பணி முக்கிய பங்கு வகிக்கின்றது என்று தெரிவித்தார்.

### சிறிலங்கா..

செயலகத்தில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல்போனோரின் பெற்றோர் பாதுகாவலர் சங்கத்தினர் கூடி நிற்பதாக அறிந்ததும் அமைச்சர் அங்கு செல்வதைத் தவிர்த்திருந்தது தெரிந்ததே.

இதேவேளை, அண்மையில் யாழ்ப்பாணம் சென்ற புனர்வாழ்வு அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தன வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனத்தால் புனரமைக்கப்பட்ட பாடசாலையைத் திறந்துவைக்க முற்பட்டவேளை மாணவர்களால் தடுத்து நிறுத்தப்பட்டிருந்தது தெரிந்ததே. குறிப்பிட்ட அரச சார்பற்ற நிறுவனம் திறப்பு விழாவை நடத்திய பின்னர் அமைச்சர் மீண்டுமொரு திறப்பு விழாவை நடத்த எத்தனித்ததையும் பல பாடசாலைகள் உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் செயற்பட முடியாமல் இருப்பதையும் மாணவர்கள் சுட்டிக் காட்டியிருந்தனர்.

### கைதிகள்...

வதற்கென நாடளாவிய ரீதியில் கருத்தரங்குகளை நடத்துவதற்கும் ஆணைக்குழு தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### கொழும்புத்துறை...

பிடிகளுக்கும் உள்ளாக்கியுள்ளனர்.

நேற்றுமாலை இவ்வீதியால் சென்ற சகல மக்களது தேசிய அடையாளஅட்டைகளும் சோதனைக்குள்ளாக்கப்பட்டுள்ளன என்றும் தெரியவருகிறது. (33)

### புலிகளின்...

குரங்குபாஞ்சான் விவகாரம் குறித்து கவனம் செலுத்தும் இவர்கள் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவைச் சந்திப்பார்கள். அத்துடன் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பாக அரசின் புதிய யோசனைகள் குறித்து வெளிநாடுகளிலுள்ள தமது சட்ட நிபுணர்களுடன் ஆலோசனை நடத்துவதற்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் உட்பட வன்னியிலுள்ள பத்து அரசியல்துறை முக்கியஸ்தர்கள் வெளிநாடு செல்ல விருக்கின்றார்கள். இவர்களது பயணம் தொடர்பான ஏற்பாடுகளையும் இவர்கள் கவனிக்கவிருக்கின்றனர்.

மேலும், எரிக் சூல்ஹெய்ம் கொழும்பில் அமைச்சர்களான மிலிந்த மொறகொட, ஜீ. எல். பீரிஸ் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளார். இதன்போது குரங்குபாஞ்சான் முகாம் தொடர்பாக எரிக்சூல் ஹெய்மிடம் அமைச்சர்கள் முறையிடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குரங்குபாஞ்சான் முகாமை அகற்றுமாறு போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு விடுதலைப்புலிகளைக் கேட்டிருந்தது. குரங்குபாஞ்சான் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசம் என்றும் அங்கு பல வருடங்களாக தமது முகாம் இருக்கின்றதெனக் கூறி விடுதலைப் புலிகள் கண்காணிப்புக் குழுவினின் கோரிக்கையை நிராகரித்துள்ளது தெரிந்ததே.

இதனையடுத்து கண்காணிப்புக் குழு நோர்வே அரசின் உதவியை நாடியுள்ளது. இந்த நிலையிலேயே எரிக் சூல் ஹெய்மின் இலங்கை விஜயம் அமைந்துள்ளது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.